# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 4 July 2011

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்

ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள் ........ 2
லைப் டிவைன் ........ 4
இம்மாதச் செய்தி ........ 12
சாவித்ரி ........ 13
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 15
அன்பர் கடிதம் ........ 20
P & Pஇல் உள்ள புதுமைகள் ........ 21
லைப் டிவைன் - கருத்து ........ 30
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 33
பெருமாள் டைலர் ........ 34
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 40
அஜெண்டா ........ 43
யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 46
இனிய உறவுக்கு இருபது வழிகள் ........ 62

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

திட்டத்திற்கு வெளியே நடப்பது திருவுள்ளம்.

உலகில் இருள் இல்லை. ஒளியைப் பார்க்க முடியாத கண்களுக்கு இருளுண்டு.

கர்மம் என்பது மேல் மனதிற்குத்தான் உண்மை. ஆழ்மனதிற்கு அதில்லை. கர்மம் கரையும் என்பதைவிட கர்மமே இல்லை என்பது பெரியவுண்மை.

அறிவு ஏற்றது அகன்றால் அன்னை நம்பிக்கையாக உதயமாவார்.

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

21. எதிர்ப்பு: இறைவனின் திருவுள்ளத்தை எதிர்க்கும் மனநிலையை எதிர்ப்பு என்கிறோம்.

22. நன்றியறிதல்: இறை அருளின் செயல்பாட்டை உணர்ந்து, வரவேற்று ஏற்பதை நன்றியறிதல் என்கிறோம்.

23. நம்பிக்கை: ஆன்மாவினுடைய உயர்ந்த ஞானம் அறிவின் நிலையில் வெளிப்படும்பொழுது அதை நம்பிக்கை என்கிறோம்.

24. சரணாகதி: இறைவனின் திருவுள்ளத்திற்கு அடிபணிவதைச் சரணாகதி என்கிறோம்.

25. சமர்ப்பணம்: நம்முடைய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை இறைவனுக்குத் தெரிவித்து அவரிடம் ஒப்படைப்பதைச் சமர்ப்பணம் என்கிறோம்.

26. அருள்: இறைவனுடைய நிபந்தனையற்ற Responseஐ அருள் என்கிறோம்.

27. அடக்கம்: இறைவனுக்கு முன்னால் நாம் ஒன்றும் இல்லை என்ற உணர்வை நாம் அடக்கம் என்கிறோம்.

28. ஜடம்: ஆன்மாவை நம்முடைய புலன்களின் மூலம் பார்க்கும் பொழுது அது ஜடமாகத் தெரிகிறது என்று பகவான் சொல்கிறார்.

29. உயிர்: சித்திலிருக்கின்ற அறிவு சித்திலிருக்கின்ற உறுதியை நகர்த்தும் பொழுது பிறக்கின்ற எனர்ஜியை நாம் உயிர் என்கிறோம்.



30. ஆர்வம்: உயர வேண்டும் மற்றும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் ஆர்வம் என்கிறோம்.

தொடரும்.....

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இதே சட்டப்படி ஒரு காலத்து ஆன்மீகப் பண்புகள் அடுத்த தலைமுறையில் சமூகப் பண்புகளாக மாறுவது சமுதாயத்தின் பண்பின் நிலையைக் காட்டும்.

***பழைய ரிஷி இன்று குடும்பம் நடத்துகிறான்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பரிணாமம் தோற்றத்திற்குரிய உருவங்களைச் சார்ந்தது. பரிணாமம் ஜீவியத்திலும் நடக்கும். மனிதன் முனைந்து முயல்வது பரிணாமம். மேலிருந்து அருள் செயல்பட்டு, மனித பரிணாம முயற்சியைத் துரிதப்படுத்துகிறது. அருளைச் செயல்பட வைக்கும் பரிணாம முயற்சி இடைவிடாத நிலையில், முயற்சி யோகமாகும். அன்னையின் அவதாரம் முயற்சியைச் சுருக்குகிறது. சரணாகதியடைந்த மனிதனின் முயற்சியை முழுவதும் அழித்து அருள் வெளிப்பாடாக்குகிறது.

***பரிணாமம் அருளை ஈர்க்கும்.***
***அருள் பரிணாமத்தைத் துரிதப்படுத்தும்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXI. The Ascent of Life

Page No.204
Para No.10

The atomic existence has an inert capacity.
It possesses itself.
It is the subjection of the material individual.
It is the subjection to not-self.
It is the first status of life.
There is the consciousness of limitation.
There is the struggle to possess.
There is the struggle to master self and not-self.
It is the type of second status.
The development of third status brings a transformation.
It is a transformation of the original terms.
They are brought into a fulfillment and harmony.
They repeat the terms.
They seemed to contradict.



## 21. உயரும் வாழ்க்கை

அணுவின் வாழ்வு ஜடமான வாழ்வு.

அது தன்னைப் பூரணமாக தானே பெற்றது.
ஜட மனிதனுக்குப் பணிவது அது.
அசத்திற்குப் பணிவது அது.
அது வாழ்வின் முதல் நிலை.
வரையறையை அறியும் ஜீவியம் உண்டு.
ஆட்கொள்ளும் போராட்டமுண்டு.
தன்னையும் உலகையும் ஆளும் போராட்டமுண்டு.
இது இரண்டாம் கட்டம்.
மூன்றாம் நிலை வளர்வது திருவுருமாற்றத்தைக் கொணர்கிறது.

ஆதி அம்சம் திருவுருமாற்றம் அது.
அவை பூரணம் பெற்ற சுமுகம்.
அவை பழைய அம்சங்களை மீண்டும் கூறுகின்றன.
அது மறுப்பாகத் தெரியும்.

The not-self is a greater self.
It comes by a love of recognition.
It also comes by association.
The not-self has a law and need.
Therefore it is a consciously accepted submission.
There is the aggregate life.
It absorbs the individual.
Now the individual possesses the life of others.
He does it as his own life.
It has to give him a lot.
He receives them as his own.
It fulfills the opposite impulse.
It is opposite to individual possession.
The individual relates to the individual.
The aggregate relates to the aggregate.

The individual is related to the world.
It can be expressed.
Nor can it be complete or secure.
This same relation must be established there too.
Only then it can be complete and secure.
Man takes difficult efforts at harmonization.
Self-affirmation and freedom are to be harmonized.
Man possesses himself by them.
Association and love, fraternity and comradeship are the means by which he gives himself to others.
His ideals are harmonious equilibrium, justice.



உலகம் நம்மைவிடப் பெரியது.
பிறரை ஏற்பதால் எழும் ஞானமிது.
அது தொடர்பாலும் எழும்.
உலகத்திற்குச் சட்டமும் தேவையும் உண்டு.
எனவே அது தெரிந்து ஏற்ற பணிவு.
பொது வாழ்வுண்டு.
அது மனிதனைக் கிரகித்துக் கொள்கிறது.
மனிதன் பிறர் வாழ்வை ஏற்கிறான்.
தன் வாழ்வாக அதை ஏற்கிறான்.
அது தருவது ஏராளம்.
அதைத் தன்னுடையதாகவே பெறுகிறான்.
எதிரானதை அது பூர்த்தி செய்கிறது.
சொந்தமானதற்கு அது எதிரானது.
மனிதன் மற்ற மனிதனுடன் தொடர்பு கொள்கிறான்.
மக்கட்தொகுப்பு மற்ற அது போன்ற தொகுப்புடன் தொடர்பு கொள்கிறது.
மனிதனுக்கு உலகுடன் தொடர்புள்ளது.
இதை விளக்க இயலாது.
இது பூர்த்தியாகாது, நிலையாக இருக்காது.
இதே தொடர்பை அங்கும் ஏற்படுத்த வேண்டும்.
அப்பொழுதுதான் உறவு பூரணமாக, நிலையாக இருக்கும்.
சுமுகத்திற்காக மனிதன் முனைந்து பாடுபடுகிறான்.
சுதந்தரமும், தனி நபர் வாழ்வும் சுமுகமாக வேண்டும்.
இவை மனிதனுக்குத் தன் வாழ்வை ஆள உதவுகிறது.
அன்பு, நட்பு, தோழமை, தொடர்பு மூலம் மனிதன் தன்னைப் பிறர்க்கு அர்ப்பணிக்கிறான்.
நியாயம், சுமுகமான சமநிலை ஆகியவை மனிதனுடைய இலட்சியங்கள்.

Mutuality and equality are other ideals.
By these he creates a balance of the two opposites.

There is an original problem of Nature.
It is the very problem of Life.
It is a conflict between Life and Matter.
It is at their foundation.
It is an attempt inevitably predetermined.
These lines are fixed.
Their resolution is attempted by a higher principle of Mind.
It alone can find the road towards harmony intended.

Really the harmony is there in a power beyond.

The end of the road is the goal. Page No.206
The goal itself can be reached by Mind. Para No.11
It can do so by going beyond Mind.
Since of That Mind is only an inferior term.

Mind is an instrument of descent first.
It is a descent into form and individuality.
Mind is secondly an instrument of reascension.
It ascends into the reality this form embodies.
That reality represents the individuality.
If our data is right, this argument is true.



சம உரிமை, பரஸ்பர உதவியும் அவன் இலட்சியங்கள்.
இவற்றால் இரு எதிர் முனைகளுக்கும் அவன் ஒரு சம நிலையை ஏற்படுத்துகிறான்.
இயற்கைக்கு ஆரம்பத்தில் ஒரு பிரச்சனையுண்டு.
அது வாழ்வுப் பிரச்சனை.
வாழ்வுக்கும் ஜடத்திற்கும் உள்ள முரண்பாடு அது.
அம்முரண்பாடு அவற்றின் அஸ்திவாரத்திலுள்ளது.
இம்முயற்சிகளின் பலன் ஏற்கனவே விதிக்கப்பட்டது.
அப்பாதை ஏற்கனவே வகுக்கப்பட்டது.
மனத்தின் உயர்ந்த இலட்சியத்தால் அச்சுமுகம் உருவாக்கப்படுகிறது.
விதிக்கப்பட்ட சுமுகத்தின் பாதையை அது மட்டுமே காண முடியும்.
உண்மையில் சுமுகம் இதைக் கடந்த சக்தியிலுள்ளது.

இப்பாதை நம் இலட்சியத்தில் முடியும்.
மனம் இந்த இலட்சியத்தை அடையும்.

மனம் தன்னைக் கடப்பதால் இந்த இலட்சியத்தை அடையும்.
மனம் அதைக் கடந்ததின் சிறு உருவம் என்பதால் இது நடக்கும்.
மனம் முதலில் சிருஷ்டியின் கருவி.
ரூபம், தனித்தன்மையுள் மனம் சிருஷ்டிக்கிறது.
இரண்டாவதாக மனம் பரிணாமத்தின் கருவி.
ரூபம் பெற்ற சத்தியத்தினுள்ளே மனம் உயர்கிறது.
அச்சத்தியம் தனித்தன்மையைப் பிரதிபலிக்கிறது.
நாம் கொண்ட கொள்கை சரியானால் இம்முடிவு சரியாகும்.

There is a perfect solution to the problem of Life.
It is not likely to be realised by association.
Nor can it be by interchange or accommodation of love.
It cannot be attained by the law of Mind.
The law of the heart too cannot do it.
It must come from the fourth status of life.
There the eternal unity of the Many is realised.
There the conscious foundation of all the operation of life exists.
It is no longer in the division of the body.
Nor is it in the passions and hungers of vitality.
Nor in the groupings of the Mind.
It is not by the imperfect harmonies of the Mind.
Nor in the combination of all these.
But it is in the unity and freedom of the spirit.

*The End.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வல்லுநர்கள் மட்டும் ஒரு காலத்தில் அறிவது அடுத்த தலைமுறையில் அனைவருக்கும் தெரிகிறது. ஒரு சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அஃது அறிகுறி.

***இன்றைய ராஜா நாளைய வெறும் மனிதன்.***
***நேற்றைய அற்புதம், இன்றைய சாதாரணம்.***



வாழ்வுக்குச் சிறந்த தீர்வுண்டு.
அது தொடர்பால் எழாது.
பரிமாறுதலாலும், அன்பு பரஸ்பரம் உள்ளதாலும் அது முடியாது.

மனத்தின் சட்டத்தாலும் அது எழாது.
இதயத்தின் சட்டமும் அதைச் சாதிக்காது.
அது வாழ்வின் நான்காம் நிலையிலிருந்து வர வேண்டும்.
ஜீவாத்மாக்களின் ஐக்கியம் அங்குண்டு.
வாழ்வின் தெளிவான அஸ்திவாரம் அனைத்தும் அங்குண்டு.

உடலின் பிரிவில் ஏற்பட்ட அஸ்திவாரமில்லை.
உயிரின் பசியாலோ, பாசத்தாலோ ஏற்பட்டதல்ல அது.
மனத்தின் தொகுப்பாலுமில்லை.
மனத்தின் அரைகுறை சுமுகத்தாலும் ஏற்பட்டதல்ல.
இவற்றின் சேர்க்கையாலுமில்லை.
ஆன்மாவின் சுதந்தர ஐக்கியத்தில் அத்தீர்வுண்டு.

*முற்றும்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உடலுக்குப் புரிந்தால் முழுவதும் ஏற்றுக் கொள்ளும். அதன் ஆர்வம் நிலையானது. உச்சமான தீவிரம் உடையது. உடல் எந்நேரமுமுள்ளது. உணர்வில் தெம்பு சேர்ந்தால் ஆர்வம் வரும். நினைவு, அன்னையைக் கொணர்ந்தால் ஆர்வம் எழும்.

*இம்மாதச் செய்தி*

# என் அகங்காரம்
# அழிந்துவிட்டது என்பது
# அகந்தையில் குரல்.





## P.127 As if Life's banner on the roads of Space

**காலத்தின் கதியைப் போற்றும் வாழ்வின் வண்ணக் கொடி**

☆ எண்ணம் ஆத்மாவின் பிரகாசமான நண்பர்கள்;

☆ பேச்சு மனத்தின் விளையாட்டு அரங்கம், எண்ணம் அம்பெனும் ஆயுதம்,

☆ மனம் பெறும் ஞானம் கருவியின் கடுமையைப் பொறுத்ததல்ல;

☆ ஞானம் இயற்கையின் இயல்பு, அனைத்தும் செல்வதும் அவ்வழியாகும்.

☆ புது இதயம் பெறும் புது மெருகு அதன் அலங்காரம்,

☆ இறையுணர்வு பெற்ற குழந்தையெனும் வாரிசு,

☆ காலம் எனும் கதியில் உரிமை பெற்ற குடிமகன்

☆ ஆதி சிருஷ்டியின் அற்புத ஆனந்தம் புல்லரிக்கும்,

☆ வாழ்வு ஆத்மாவின் இளமையில் மூழ்கித் திளைத்தது.

☆ விவரிக்கவொண்ணாத வேகம் நிறை கொடுமை,

☆ ஆனந்த நிர்ப்பந்தத்தின் அதிவேகமான கட்டாயம்

☆ உலகினூடே சிரித்துக் குலுங்கும் ஓடையென ஒழுகும்.

☆ உயர்ந்து ஒதுங்கி நிற்கும் வலிமை பெற்ற திறனாளும் பாங்கு,

☆ அமைதியான வெளியில் அதிர்ஷ்டம்,

☆ பிரபஞ்சம் அன்பெனும் பிரவாக அமைதி பெறும்.

- ☆ திகட்டாத இனிமை செங்கோல் ஓச்சும் ராஜ்ஜியம்,
- ☆ காலத்தின் உதடு முணுமுணுக்கும் இன்பமான இசை.
- ☆ இயல்பான சட்டம் எழுச்சியால் பெறும் வேகம் தரும் சுதந்தரம்,
- ☆ சூரியோதய விடுதலை ஆத்மாவிற்களித்த ஆனந்தம்,
- ☆ விடுதலை பெற்ற செயலின் பெருமை விரித்த பரப்பு
- ☆ நெருப்பான இதயம் வேகமாகப் பெற்ற பொன்மயமான விடுதலை.
- ☆ ஆத்ம அழிவு எழுப்பும் பொய்யின் ஆதிக்கம் அங்கில்லை,
- ☆ சொல்லோ, செயலோ, எண்ணமோ குதர்க்கத்தை ஏற்க முடியவில்லை
- ☆ அவற்றால் சிருஷ்டியின் சத்தியத்தைக் கவர்ந்தழிக்க இயலவில்லை;
- ☆ இயற்கை சக்தியின் சத்தியம் நிறை உண்மை லோகம்.
- ☆ விடுதலை பெற்ற சுதந்தரம் தர்மமாக ஆளும் லோகம்.
- ☆ தொடர்ந்த மகிழ்வு மூழ்கும் லோகங்கள்:
- ☆ அழகெனும் ஆச்சரியம் விழித்தெழும் அரங்கு,
- ☆ அசுர ஆட்சியின் அற்புத அலங்காரம் மிளிரும் வெளி,
- ☆ பெருந்திறன் பெற்ற ஆசைகள் வாழ்வின் கட்டியக்காரனாய் ஆடின.
- ☆ ஆயிரம் சுவர்க்கம் எழுந்து அமைதியாய் அமையும்;
- ☆ பெருமையும் அருளும் வேலியற்ற எல்லையுள் எழுந்தன
- ☆ அவை பரமண்டலம் வகுத்த பலரக வாழ்வு.
- ☆ எண்ணற்ற ஆத்மாக்கள் எழுந்து எழுப்பும் குரலொலி,
- ☆ ஆழ்ந்த ஆனந்தம் மார்பைக் காட்டும் மகிழ்வு,

❃❃❃



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ சூட்சுமம்

❃ **வாழ்வின் சூட்சுமங்கள் அனந்தம், அவை தர்மத்திற்குக் கட்டுப்பட்டவை அல்ல. நாம் அவற்றை அறிவது ஒரு அற்புதம்.**

எங்கும், எதுவும், எவரும், எந்த நேரமும் சூட்சுமத்தால் சூழப்பட்டுள்ளனர்.

ஸ்விட்ச்சில் கரண்ட் உள்ளது கண்ணுக்குத் தெரியாது. அறிவுக்குத் தெரியும். கரண்டி சூடாக இருந்தால் சூடு பார்வையில் படாது. "ஏன் இந்த கரண்டி இங்கிருக்கிறது? நெருப்புக்கு அருகில் உள்ளது'' என்ற எண்ணம் ஒருவேளை சூடாக இருக்கும் என அறிவிக்கும். சூட்சுமமானவர்க்கு சூடு கண்ணுக்கு அலை அலையாகத் தெரியும். அன்பர்கள் முகம் பிரகாசமாக இருக்கிறது. அன்னையைப் பற்றிப் பேசும்பொழுது பலர் நெகிழ்ந்துவிடுகின்றனர். விஷயம் என்றால், அன்னை முதலில் நினைவு வருகிறது. போலீஸுக்கு தொலைந்து போன பொருளைச் சொல்வதன் முன் அன்னைக்குச் சொல்கின்றனர். அன்னையிடம் சொல்லியதால் போலீஸுக்குச் சொல்லாமலிருக்கின்றனர். 1960 முதல் அன்னையைத் தரிசிக்கும் ஆபீசருக்கு மாரடைப்பு (heart attack) வந்தபின் 3, 4 நாட்கள் வரை நான் கேட்கும் வரை மதர் (Mother) நினைவு வரவில்லை. அவர்

அன்பரிலர். பேராசிரியர் தினமும் 1 மணி நேரம் அன்னை முன் உட்கார்ந்து ஒவ்வொரு பூவாக அர்ச்சனை செய்கிறார். அவருக்குப் பிரச்சனை எனில், அன்னை

- முதலில் நினைவு வரும்.
- அது அன்னையில்லை, அவர் (personality) "நான்" என்பது.
- பேராசிரியருக்கு அன்னையெனில் தான், ''நான்'' விலகி அன்னை பிரதிஷ்டை செய்யப்பட்டால், சிரமம் என வந்திருக்காது. அவர் 1968 முதல் 1973 வரை புதுவை வந்தபொழுது அவர் வாழ்வில் நடந்தவை அதற்கு முன்னும் பின்னும் நடக்கவில்லை.
- "நான்" தெரிய வேண்டும், நகர வேண்டும், அன்னை அங்கு வர வேண்டும்.

## ✡ தூக்கம்

தற்சமயம் இதை ஒரு பிரச்சனையாக்க வேண்டாம்.

இந்தத் தூக்கம் எனக்குப் போக நானும், பிறரும் என்ன செய்ய வேண்டும் என்பதை எளிமையாக அறியலாம். அது பெரிய ஆழம்.

- அதைப் புறக்கணித்து நடப்பது போதும்.
- அதை ஏற்றுச் செயல்படுவது முடிவான பெரியது.
- பல வழிகளில் பல முறை நாள் கணக்கில், வருஷக் கணக்கில் தூக்கம் போய் வந்துள்ளது.
- இதை ஏற்க மூலத்தின் Originஇல் Sincerity தேவை.
- வக்கீல்கள், ஆடிட்டர்களுக்கு ஒரு இங்கிலீஷ் பத்திரிகை பிடிக்கவில்லை. ஆனால் அடுத்ததை அவர்கள் வாங்குவதில்லை.



- தன்னையறிய வேண்டும், நல்லெண்ணம் (Self-awareness, GOODNESS)* அவசியம்.
- நல்லெண்ணம் Good Will என்பது பொருள் தருவது மட்டுமல்ல. நமக்கு நல்லெண்ணம் உண்டு என நாம் அறியும் வரை அது நல்லெண்ணமாகாது. நமக்கு பலியானவர் மூலம் வரும் life response நல்லெண்ணத்தை நிரூபிக்கும்.
- ஊழலுக்குப் பேர்போனவரை ஊழலை ஒழிக்கச் சொல்வது போன்ற முயற்சி.

## ✡ ஒரு பிடி தான்யத்தை விட்டுக்கொடுக்க முடியாமல் இராஜ்யத்தை இழந்தவர் ஆயிரமாயிரம் பேர்.

- ஒரு பெரிய அருளை நாம் கொடுக்க ஏற்பாடு செய்தால் அதிலிருந்து மெனக்கெட்டு விலகுபவர் மனம் இதைக் காட்டும்.
- 25 வருஷத்தில் ரூ. 2500/- வசூல் செய்த பொது ஊழியருக்கு வருஷம் 85,000 வருமானம் வரும் வழி ஆச்சரியமாக இருந்தது. அவரிடம் வேலை செய்பவர் அதைச் சொல்லியதால் அந்த எண்ணத்தை அவரால் ஏற்பது மரியாதையில்லை என மறுத்துவிட்டார்.
- நமக்குள்ளது சில கோடி சொத்து. காத்திருப்பது பல ஆயிரம் கோடி. இதை விடாமல் அது வாராது.
- 27,000க்குப் பதிலாக 81,000க்கு நிலத்தை விற்றுக் கொடுத்தவரை படையாச்சி புண்படும்படிப் பேசினார். மகன் தருவதாகக் கூறிய 4500 ரூபாயைத் தரவில்லை.

---

* நம்மைக் கரித்துக் கொட்டியவர் நாம் மாறியதைக் கூற வேண்டும்.

- பையன் அமெரிக்காவிலிருக்கிறான். தாயார் தங்க இடமில்லாமல் தவிக்கிறாள். தாயாரை நிரந்தரமாக அமெரிக்கா அனுப்ப முடியும். அம்முயற்சியை ஒருவர் மேற்கொண்டால் பெறுபவர் செய்யும் வக்ரம் புரியும்.
- நகைக்குப் பெட்டி செய்து கொடுத்த நகைக் கடைக்காரர் கடை 100 மடங்கு பெரியதாயிற்று. அப்பெட்டி அன்னைக்குப் போயிற்று.
- 10 வருஷமாகத் தான் சாப்பிடும் வீட்டில் 1 கிலோ சர்க்கரை வாங்கிக் கொடுத்துவிட்டு அதன் விலை 1½ ரூபாயைப் பெறுபவர் நாகரிகத்தை எப்படி விளக்குவது?

## ✡ அன்னை சித்தம், என் பாக்கியம்

- *விஷயம் முறையிலில்லை. சொல்லும் மனநிலையில் உள்ளது. அன்னை சித்தம், என் பாக்கியம் என்பதை சொல்ல வேண்டிய முறையில் சொன்னால், மனித சுபாவத்தின் ஆழத்தில் மறைந்துள்ள வாய்ப்புகள் எழும்.*
- உள்ளபடி உண்மையாக இதைச் சொல்லும்பொழுது "நாம்" வந்துவிடும். அது வருவது நமக்குத் தெரியாது. நமது மனம் நமக்குத் திருவுள்ளம் எனத் தெரியும்.
- உண்மை முழுமையாக இருந்து சொல்லும்பொழுது Mother நம் இஷ்டப்படி நடப்பார்கள். அன்னை சித்தம் செயல்படாது. விபத்தில் மாட்டிய பெண்ணின் சகோதரி பம்பாய் போனது போல் அமையும். அதையும் கடந்தது நமது உண்மை Sincerity. Mother அதை ஏற்றுச் செயல்படுவதானால் மகனைப் பள்ளி (school)யை விட்டு நிறுத்து, பெண்ணுக்குக் கல்யாணம் செய்யாதே, ஹாஸ்டலில் (hostel) உள்ள பையனுக்குப் பணம்



அனுப்பாதே, ஜுரமான மகளைப் போய்ப் பார்க்காதே என்று உத்தரவு "Sanction" உள்ளிருந்து எழும்.

- இன்று ஒரு நல்ல விஷயத்தில் அதைச் சோதனை (test)ஆகச் செய்ய முடியுமா என நடப்பது பெரிய காரியம். 1 லட்சம் சம்பாதிப்பவருக்கு 12 லட்சம் சம்பளம் வந்த பிறகு அவர் போகவில்லை. போகச் சொன்னால் அவரால் முடியாது. போகாதே என்றால் எவரால் முடியும்?

சாஸ்திரிக்குப் பிரமதர் பதவியை ஏற்காதே என அன்னை சித்தம் சொன்னால் ஏற்க முடியுமா? எந்தச் சிறிய காரியத்திலும் இதைச் *செய்ய முடியாது.*

காரியம் போன் பேசுவதானாலும், 'பேசாதே' என 'அன்னை சித்தம்' கூறினால் பேசாமலிருக்க முடியாது எனப் பார்ப்பது ஞானம், அன்னை சித்தம் வாராது. வந்தால் ஏற்க முடியாது.

- மிகவும் 'எளிமையான கடினம்'. "(Simple and profound)".

*தொடரும்....*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பொறுமையில்லை என்பதை இழந்ததால் என்னால் தாமதிக்க முடியாது.

***பொறுக்க முடியாதவன் அவசரத்தால் துடிப்பான்.***
***பொறுமையுள்ளவன் அவசரமில்லாமல் துடிப்பான்.***

- ***பொறுமைசாலிக்கும் பொறுமையில்லாதவனுக்கும் வேகம் ஒன்றே.***

# அன்பர் கடிதம்

Consecrations to the Mother!

Dear Mother,

Thanks for being with me!

இது நாள்வரை என்னை வாழ வைத்து என் வாழ்க்கைக்கு அர்த்தம் அளித்த என் இனிய அன்னைக்கு என் சிரம் தாழ்த்தி நன்றியுடன் வணங்குகிறேன். ஒவ்வொரு நிமிடமும் நான் அன்னையிடம் விஷயங்களை சமர்ப்பணம் செய்கிறேன், அன்னை துல்லியமாக அருள் புரிகிறார். நாம்தான் அன்னை Consciousnessலிருந்து சற்று விலகலாம். ஆனால் அன்னை தொடர்ந்து அருளுகிறார். Labக்கு நான் Rs.20,000/- தர வேண்டும் (மாதாந்திர கட்டணம்). நான் கவனக்குறைவாக Rs.24,000/- கொடுத்திருக்கிறேன். ஆனால் கொடுக்கும்போது, அன்னையை அந்த தொகை பெறுபவரின் ஆடையின் நிறத்தில் நினைத்துக் கொண்டேன் (அன்னையிடம் கொடுப்பதாக). இரவு 10.30 மணிக்கு போன் வந்தது, நான் Rs.4,000/- தொகை அதிகம் செலுத்தியதாக. அன்னைக்கு நன்றி! நான் வேறு ஏதும் கூறுவதற்கு இல்லை. என் உதவியாளர் அந்த நபர் தெய்வம் என்று கூறினார் - உண்மையை ஒப்புக்கொண்டு நேர்மையாக நடந்ததால். அவருக்கு நன்றி என்றாலும் பணம் வாங்கியது என் உயிர் அன்னை அன்றோ! அன்னை எப்படி என்னை ஏமாற்றுவார்! மேலும் அன்னையின் ஆன்மீக மற்றும் வாழ்வின் நெறிகளை அன்னையின் கண்ணோட்டத்தில் (in perfect Mother's Consciousness) வாழ எனக்கும் என்னை போன்றோருக்கும் எனது ப்ரார்த்தனைகள்! நன்றி!

-- Dr. சண்முகப்பிரியா, சென்னை-75.

❋❋❋



# P & Pஇல் உள்ள புதுமைகள்

N. அசோகன்

வாழ்க்கை என்பது எப்பொழுதும் ஒரே மாதிரி நிலைத்து நிற்பதில்லை. அது சதா மாறிக்கொண்டே இருக்கிறது. மேலும் அடுத்தடுத்து உயர்ந்த நிலைகளுக்கும் போய்க்கொண்டே இருக்கிறது. அப்படி உயர்ந்துகொண்டே போகும் பொழுது புதிய புதிய பரிமாணங்களையும் வெளிப்படுத்துகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் வாழ்ந்த வாழ்க்கையையும் நாம் இப்பொழுது வாழ்கின்ற வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால் எல்லா இடங்களிலும் இப்போதைய வாழ்க்கை பழைய வாழ்க்கையைவிட முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். சாப்பாடாக இருக்கட்டும், துணிமணிகளாக இருக்கட்டும், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு, பொழுதுபோக்கு என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் இப்போதுள்ள வசதிகள் எதுவும் அன்று அத்துறைகளில் இல்லை. 300 வருடங்களுக்கு முன்பு நாம் வாழ்ந்த வாழ்க்கையை எடுத்துக்கொண்டால்கூட இப்போது நாம் அனுபவிக்கின்ற எந்த வசதியும் அப்பொழுது இல்லை. 300 வருடங்களுக்கு முன்பு இலண்டன், பாரீஸ் போன்ற மாநகரங்கள்கூட ஜனத்தொகையில் ஒரு சில இலட்சங்களைத் தாண்டவில்லை. ஆனால் இப்பொழுது டோக்கியோ மற்றும் நியூயார்க் போன்ற மாநகரங்களில் ஜனத்தொகை ஒரு கோடியைத் தாண்டிவிட்டதென புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இப்பொழுதுள்ள மின்சார வசதி மற்றும் கார், டூ-வீலர், ட்ரெய்ன், விமானம், கம்ப்யூட்டர் போன்ற நவீன மெஷின்களையும், சாதனங்களையும் அப்போதுள்ள மக்கள் பார்த்ததும் இல்லை, கேள்விப்பட்டதுமில்லை. அம்மாதிரியே இன்னும் 200 வருடங்களுக்குப்பின் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைப் பற்றி

நமக்கு ஐடியாவேக் கிடையாது. இதே வாழ்க்கையைத்தான் மக்கள் அப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்று நாம் சொல்வதற்கில்லை. இப்போது வசதி படைத்தவர்கள்தான் விமானத்தில் செல்கிறார்கள். ஆனால் 200 வருடங்கள் கழித்து எல்லோருமே விமானத்தில் போகக்கூடிய அளவிற்கு விமானப் பயணம் பஸ் பயணம் போல் மலிவாகிவிடலாம்.

இன்று ஒரு பைபாஸ் சர்ஜரியோ, மாற்று சிறுநீரக ஆபரேஷனோ அல்லது brain tumor ஆபரேஷனோ செய்வதற்கு ஒரு சில லட்சங்கள் செலவு வைக்கிறது. ஆனால் 200 வருடங்கள் கழித்து இதே ஆபரேஷன் 500-1000த்திற்குள் முடியுமளவிற்கு மருத்துவ டெக்னாலஜி முன்னேற்றம் அடைந்திருக்கும்.

டெக்னாலஜியில் மட்டும்தான் உலகம் மாறியிருக்கிறது என்று நாம் சொல்வதற்கில்லை. நம்முடைய சமூக ஸ்தாபனங்கள், நாம் கடைபிடிக்கும் values அதாவது பண்புகள் மற்றும் நடைமுறைகள், வாழ்க்கைப் பாணி அதாவது Lifestyle என்று எல்லாமே பெருமளவிற்கு மாறி உள்ளன. உலகில் பெரும்பாலும் முடியாட்சி போய் குடியாட்சி வந்துள்ளது. பொருளாதாரத் துறையில் pure free market capitalism என்பது முற்றிலும் மறைந்து socialism மற்றும் communism வந்துவிட்டன. சில நூற்றாண்டுகளுக்கு முன்புகூட மதவழிபாடுதான் மக்கள் வாழ்க்கையின் மைய அம்சமாக விளங்கியது. வாழ்க்கை என்பது வழிபாடு செய்வது மற்றும் கோயில்களுக்கும், மசூதிகளுக்கும், தேவாலயங்களுக்கும் செல்வதையே ஒட்டி இருந்தது. ஆனால் மக்கள் இன்று மதங்களின் பிடியில் அவ்வளவாக இல்லை. மக்கள் தங்கள் கவனத்தை வருமானம், வசதி, முன்னேற்றம் என்று வேறு திசைகளில் திருப்பி கோயில்களில் பொழுதைக் கழிப்பதைவிட வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க வேண்டும் என்ற புதிய மனப்பான்மையைக் கொண்டு வந்துவிட்டார்கள். பழங்காலத்தில் ஜாதி மற்றும் பொருளாதார ஏற்றத்



தாழ்வுகள் seriousஆக எடுத்துக் கொள்ளப்பட்டன. கீழ்நிலையில் இருப்பவர்கள் கீழேயே இருக்க வேண்டும் என்று சமூகம் நிர்பந்தித்தது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அவர்களுக்கு உரிமையே இல்லை என்று பேசப்பட்டது. ஆனால் இப்போது உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று ஜாதியின் அடிப்படையிலோ, பொருளாதார அடிப்படையிலோ, மதத்தின் அடிப்படையிலோ பிரிவினைகளை உண்டுபண்ணும் மனோபாவத்தைச் சமூகம் ஆதரிப்பதில்லை. எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் மற்றும் சம உரிமைகள் வழங்க வேண்டும் என்ற மனோபாவம்தான் இன்று உலகத்து மக்களிடையே நிலவுகிறது.

பழங்காலத்தில் உயர்ந்தவர்களின் அதிகாரத்திற்கு அப்படியே அடிபணிவது, அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்வதை மறுபேச்சில்லாமல் ஏற்றுக்கொள்வது, ஊரில் நாலு பேர் எப்படியிருக்கிறார்களோ அப்படியே நாமும் இருப்பது (social conformity), வயதில் பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பது மற்றும் சமூகத்தில் securityயை நாடிப்போவது போன்ற பழைய valueக்களெல்லாம் குறைந்துபோய் சுதந்திரமாகச் செயல்படுவது, தனக்குப் பிடித்த மாதிரி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது, தன்னுடைய சொந்த கருத்தை வலியுறுத்துவது, அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்த்துப் பேசுவது மற்றும் securityயைத் தேடாமல் adventureஐத் தேடுவதென்று மக்களுடைய valueக்கள் மிகவும் மாறிவிட்டன. கூட்டுக் குடும்பங்கள் குறைந்து தனிக் குடும்பங்கள் அதிகரித்துவிட்டன. பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கம் காதல் திருமணங்களும் அதிகரித்து வருகின்றன. சமையலறையே கதியென்று கிடந்த பெண்கள் இப்போது வேலை, உத்தியோகம் என்று எல்லா இடங்களுக்கும் வருகிறார்கள். பொது இடங்களிலும் சுதந்தரமாக நடமாடுகிறார்கள்.

நான் வலியுறுத்த விரும்பும் கருத்து என்னவென்றால் எதுவும்

நெடுநாள் மாறாமல் நிலைத்து நிற்பதில்லை. இருப்பதைவிட புதியதாகவும், அதைவிட சிறந்ததாகவும் இருக்கின்ற மற்றொன்று பழையதை கிளப்பிவிட்டு புதியதாக அதனிடத்திற்கு வந்துவிடுகிறது. சமூகத்தினுடைய முன்னேற்றத்தினுடைய சாராம்சமே இதுதான். படைப்பைப் பற்றி அன்னை சொல்கின்ற கருத்தும் சமூகத்தில் நிகழ்கின்ற மாற்றமும் முழுவதும் ஒத்துப்போகின்றன. படைப்பு எந்நேரமும் இறைவனை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும், அப்படி முன்னேறும் பொழுது பழைய அம்சங்களை விட்டுவிட்டு புதிய பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது என்றும் அன்னை ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார். மேலும் அவர் படைப்பைப் பற்றி சொன்ன ஒரு கருத்து நமக்கு மிகவும் அதிர்ச்சியை கொடுக்கக்கூடியதாக இருக்கும். அதாவது இந்த பிரம்மாண்டமான படைப்பு ஒவ்வொரு நிமிடமும் தன்னுடைய எல்லா அம்சங்களிலும் தன்னை புதுப்பித்துக் கொண்டிருக்கிறது என்று அவர் சொல்கிறார். அதாவது இந்த நிமிடம் இருக்கின்ற பிரபஞ்சமும், அடுத்த நிமிடம் இருக்கின்ற பிரபஞ்சமும் வேறு வேறு என்றாகிறது. இப்படி நிமிடத்திற்கு நிமிடம் பிரபஞ்சம் முழுவதும் மாறுகிறது என்பது நமக்குத் தெரிவதேயில்லை. நமக்கு எல்லாம் ஒரே மாதிரிதான் இருப்பதாகத் தெரிகிறது. நமக்கு தெரியவில்லை என்பதால் அன்னை சொல்வது உண்மை இல்லை என்றாகிவிடாது.

அன்னையும், பகவானையுமே நாம் புதுமைக்கு முன் உதாரணங்களாகச் சொல்லலாம். அவர்களுடைய சிந்தனை, செயல்பாடு, கற்பனை மற்றும் எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் சொல்லியிருக்கின்ற கணிப்புகள் எல்லாமே புதுமையாகத்தான் இருக்கின்றன. அவர்களுடைய ஆன்மீக உபதேசங்கள் புதுமையானவை. அவர்கள் கண்டறிந்த சத்தியஜீவியம் புதுமையானது. அடுத்ததாகத் திருவுருமாற்றத்திற்கு அவர்கள் சொல்கின்ற பூரணயோக அணுகுமுறையும் புதுமையானது.



அவர்கள் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்த விதம், அவர்கள் செயல்பட்ட விதம் மற்றும் அவர்களுடைய பக்தர்களுக்கும், சீடர்களுக்கும் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழ்க்கையையும், யோகத்தையும் இணைக்க வேண்டும் என்று சொல்லிய எல்லாமே புதுமையானவைதாம். உலகத்தின் பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டம் சத்தியஜீவியம் இறங்குவது என்றும், வாழ்க்கை இறைமயமாகி சத்தியஜீவிய மனிதன் உருவாகப்போகிறான் என்றும் அவர்கள் அறிவித்தது இந்திய ஆன்மீகப் பாரம்பரியத்தில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஏனென்றால் அதுவரையிலும் பூவுலக வாழ்க்கையையும், மானிடப் பிறப்பையும் வேண்டாம் என்று தவிர்த்து, மோட்சத்தை நாடுவதுதான் இந்திய ஆன்மீகத்தின் நோக்கமாக இருந்தது. மேலும் பரம்பரை யோகங்களைப் போல அறிவையோ, உணர்வையோ அல்லது வேலையையோ மற்றும் உடம்பையோ என்று ஏதேனும் ஒன்றை பரிசுத்தி செய்வது என்றில்லாமல் நம் முழுஜீவனையும் திருவுருமாற்றம் செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியதும் ஒரு புதுமையான உபதேசமாக அமைந்தது.

பெண்களுக்கும் ஆன்மீகத்தில் சம உரிமை உண்டு என்று அன்னை சொன்னதும் பூரணயோகத்தில் தியானத்திற்குக் கொடுக்கப்படுகின்ற அதே முக்கியத்துவம் பிஸிக்கலாக நாம் செய்யும் வேலைக்கும் உண்டு என்று சொன்னதும், உலக ஒற்றுமையின் சின்னமாக ஆரோவில் நகரத்தைத் தொடங்கி வைத்ததும், பரமசிவன், மகாவிஷ்ணு, கிருஷ்ண பகவான் மற்றும் முருகர், விநாயகர் போன்ற கடவுள்களை வழிபடுவதைத் தாண்டி பரம்பொருளை வழிபடுவதுதான் சரி என்று அன்னை சொன்னதும் என்று இவை எல்லாமே இந்திய ஆன்மீகத்தில் புதுமையான கருத்துகளாகும். அம்மாதிரியே அரசியல் போராட்டத்திற்குப் பதிலாகத் தவத்தை மேற்கொண்டு ஆன்மீக சக்தியை பயன்படுத்தி இந்தியாவிற்குச் சுதந்தரத்தை வாங்கித் தரலாம் என்று பகவான்

முயற்சி செய்ததும், பூரணயோகத்தில் மானிட குருநாதருக்குப் பதிலாக உள்ளிருக்கும் இறைவனையே குருவாக பயன்படுத்தலாம் என்று சொன்னதும், இதுவரையில் எந்த இந்தியத் தத்துவ ஞானியோ, ஆன்மீகச் சிறப்புப் பொருந்திய மகானோ விளக்காத அளவிற்கு இறைவன் எப்படி படைப்பை நிகழ்த்துகிறான், படைப்பில் உள்ள அடிப்படை செயல்பாடுகள் என்ன, ஆன்மா எப்படி ஜடமாக மாறியுள்ளது, ஜடத்திலிருந்து மீண்டும் எப்படி ஆன்மா வெளிவருகிறது என்று படைப்பின் அடிப்படை ரகசியங்களை லைஃப் டிவைன் புத்தகத்தின் மூலம் விவரமாக விளக்கி எழுதியதும் இந்திய ஆன்மீக வரலாற்றில் மிகவும் புரட்சிகரமான புதுமைகளாக அமைந்துள்ளன.

இதுவரையிலும் சொன்னதுபோக அவர்கள் செய்த மேலும் சில புதுமையான செயல்பாடுகளையும், வெளியிட்ட புதுமையான சில கருத்துகளையும் இங்கே பட்டியலிட விரும்புகிறேன்.

1. நாம் கடவுள்களை (பரமசிவன், மகாவிஷ்ணு, முருகர், விநாயகர் போன்றவர்கள்) வியந்து பாராட்டி வழிபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அன்னையோ இந்த கடவுள்களுக்கு இல்லாத சைத்திய புருஷன் மனிதர்களுக்கு இருப்பதால் மனிதன் தெய்வங்களைவிட உயர்ந்தவன் என்றும், மனிதனால் சத்தியஜீவியப் பிறவியாக மாற முடியும். ஆனால் மானிடப் பிறப்பு எடுத்தாலன்றி தெய்வங்களால் நேரடியாக சத்தியஜீவியப் பிறவியாக மாற முடியாது என்ற ஒரு புரட்சிகரமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

2. மலர்களின் ஆன்மீக முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றிற்கு எல்லாம் ஆன்மீகம் பொருந்திய பெயர்களைச் சூட்டியிருப்பது அன்னையினுடைய ஒரு புதுமையான செயல்பாடாகும்.

3. அகம்தான் புறத்தை நிர்ணயிக்கிறது. புறம் என்பது அகத்தின்



பிரதிபலிப்புதான் என்று அவர் சொன்ன கருத்தை ஸ்ரீ அப்பா அவர்கள் Life Response என்ற புதிய பெயர் கொடுத்து psychologyஇல் ஒரு புதிய கண்ணோட்டத்தையே ஏற்படுத்தியுள்ளார்.

4. மதங்களின் ஆட்சி முடியும் காலம் வந்துவிட்டது என்றும், எதிர்காலம் ஆன்மீகத்திற்குதான் உரியது என்றும் அன்னை தெரிவித்த பொழுது conservative மனப்பான்மையுள்ள பழமைவாதிகள் பல பேருக்கு அது மிகவும் அதிர்ச்சியாகவும், அதே சமயத்தில் ஒரு புதுமையான கருத்தாகவும் அமைந்தது.

பகவான் மற்றும் அன்னையின் சீடர்கள் என்ற முறையில் ஆன்மீகத்தில் பலப்பல புதுப்புது விஷயங்களை அவர்கள் மூலமாக நாம் அறிந்து கொண்டுள்ளோம். இப்பொழுது P & P நமக்கு வாழ்க்கையைப் பற்றியும், Life Response செயல்பாடுகளைப் பற்றியும் நிறைய புதுக் கருத்துக்களையும், விஷயங்களையும் கற்றுக் கொடுக்கக்கூடிய திறன் படைத்தது என்று அப்பா மூலம் தெரிந்து கொண்டுள்ளோம். அப்படி P & Pஇல் என்ன விஷயங்கள் இருக்கின்றன என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

1. முதலாவதாக Life Response விதிமுறைகள் எப்படி செயல்படுகின்றன என்பதற்கு இந்தக் கதை சிறந்த நிரூபணமாக அமைந்துள்ளதாக அப்பா கருத்துத் தெரிவித்துள்ளார். கதையில் உள்ள முக்கிய கதாப்பாத்திரங்கள் அவர்களுக்கு வந்துள்ள பிரச்சனைகளை எப்படிப் பொருத்தமான மனமாற்றங்களைக் கொண்டு வந்து வெற்றிகரமாகச் சமாளிக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறோம். Life Response Theoryன் சாராம்சமே அகம் புறத்தை நிர்ணயிக்கிறது என்பதுதான். நமக்குப் புறத்தில் எந்தவிதமான result வேண்டுமோ அதற்கேற்ற எண்ணங்களையும், உணர்வுகளையும், மனோபாவங்களையும் நாம் அகத்தில்

கொண்டு வந்தால் அவை தானாகவே செயல்பட்டு நாம் விரும்புகின்ற புற மாற்றங்களையும், நல்ல பலன்களையும் கொண்டு வருகிறது என்று நாம் பார்க்கலாம்.

2. நமக்குண்டான அதிர்ஷ்டம் மற்றும் ஐஸ்வர்யத்தை அபிவிருத்தி செய்து கொள்வதிலும், நம்முடைய சாதனை புரியும் திறன்களை மேம்படுத்திக் கொள்வதிலும் ஆர்வமாக உள்ளோம். இதற்குப் பதில் அளிக்கும் வகையில் அப்பா என்ன சொல்கிறார் என்றால் நல்லெண்ணம், சுமுகம், self-giving, அடக்கம், organisation, மனமாற்றம் மற்றும் மௌனசக்தி போன்ற பண்புகள் அதாவது values நம்முடைய ஐஸ்வர்யம் மற்றும் சாதனையை மேம்படுத்தும் என்று சொல்கிறார். அதே சமயத்தில் உணர்ச்சிவயப்பட்ட செயல்பாடு, ஆணவமான போக்கு, குறுகிய மனப்பான்மை, அவசரப்படுத்துதல் மற்றும் வீண் எதிர்பார்ப்பு போன்றவைகள் நம்முடைய சாதனைகளைக் கெடுத்து வீண் பிரச்சனைகளை உண்டாக்கும் என்றும் சொல்கிறார். இக்கதை அப்பாவினுடைய இந்த கருத்துக்கள் உண்மை என்று நிரூபிப்பதை நாம் பார்க்கிறோம்.

3. Individuality என்ற தனித்தன்மையைப் பற்றி அப்பா நிறைய எழுதியிருக்கிறார். மற்றும் வலியுறுத்தவும் செய்திருக்கிறார். Social conformity என்ற சமூகத்தோடு ஒத்துப்போகும் மனநிலையைத் தாண்டி தனித்தன்மையை உருவாக்கிக் கொள்கின்ற எந்த ஒரு நபரும் தன்னுடைய சாதிக்கும் திறனை மற்றவர்களைவிட ஆயிரம் மடங்கு உயர்த்திக் கொள்ளலாம் என்பது அப்பாவினுடைய கூற்று. இந்தக் கூற்றின் உண்மையை லிசி என்ற கதாப்பாத்திரம் சிறப்பாக நிரூபிப்பதை நாம் இக்கதையில் பார்க்கிறோம். அவள் தனக்கென்று ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொள்கிறாள். தனக்கென்று சில valueகளையும் வளர்த்துக் கொண்டு



எவ்வளவு பெரிய சிரமம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும் அந்த valueகளை விடாமல் அவற்றில் உறுதியாக நிற்கிறாள். இதனால் அவள் தனக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டத்தை உண்டுபண்ணிக் கொள்கிறாள் என்று நாம் இக்கதையில் பார்க்கிறோம்.

4. ஜேன் ஆஸ்டின் மனித சுபாவத்தை எவ்வளவு சிறப்பாகவும், ஆழமாகவும் புரிந்து வைத்திருக்கிறார் என்பது இக்கதையின் மூலம் நமக்குத் தெரிகிறது. இத்தகைய அறிவு முதிர்ச்சியை நாம் பொதுவாக 50 வயதைக் கடந்த எழுத்தாளர்களிடம்தான் பார்ப்போம். ஆனால் P & Pயின் முதல் draftஐ ஜேன் ஆஸ்டின் எழுதும் பொழுது அவர்களுக்கு வயது வெறும் 21தான். இவ்வளவு சின்ன வயதில், இவ்வளவு சிறப்பாக மனித சுபாவத்தை ஒருவர் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதே நமக்கு ஒரு புதுமையான செய்தியாகத்தான் இருக்கிறது. அப்பா நமக்கு Life Response மற்றும் inner, outer correspondenceஐ பற்றி நிறைய கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆனால் ஜேன் ஆஸ்டினுக்கு யாரும் கற்றுக் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர் தானாகவே இதையெல்லாம் புரிந்து கொண்டு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பொறுக்க முடியாதவன் அவசரப்படுகிறான். பொறுமைக்குச் சிருஷ்டியின் வேகமுண்டு. அதனால் அது க்ஷணம் தரிக்காது.

## Our chief need is to discover the origin and nature of the Ignorance

(*Page 365, The Life Divine*)

## அஞ்ஞானத்தின் மூலம், சுபாவத்தை அறிவது முக்கியம்

Science என்ற சொல்லைத் தமிழில் விஞ்ஞானம் என மொழி பெயர்க்கிறோம். ஞானம் எனக் கூறுவதில்லை. ஐரோப்பா விஞ்ஞானம் பிறந்த நாடு. அங்கு இயற்கை செயல்படும் வகைகளையும், அதன் சட்டங்களையும் அறிவது விஞ்ஞானம் எனக் கருதப்பட்டது. அதன் விளைவாக பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. 365 நாள் என்பது வருஷம் என்றனர். கங்கையை நாம் கங்காதேவி எனவும், ஜீவ நதியெனவும், நாம் வணங்கும் தேவதை எனவும் கூறுவது போல், சூரியனை Sun god என்ற ஐரோப்பியர், சூரியனை இயற்கையாகக் கருதி செய்த ஆராய்ச்சியால் அதன் அம்சங்களை அறிந்தனர். இன்று விஞ்ஞானம் பல்வேறு துறைகளையுடையது. எல்லாத் துறைகட்கும் உரிய அடிப்படையான சட்டங்கள் பல.

- கண்ணுக்குத் தெரிவது விஷயம். கற்பனையில் எழுவதல்ல.
- அறிவுக்குப் புலப்படுவதே பகுத்தறிவு, அழகாக அலங்கரிக்கப்படுவதில்லை.
- புரியும் அம்சங்களை விளக்க வேண்டும், அளக்க வேண்டும்.
- அளப்பதற்கு அளவு கோல் தேவை. (scales, measurements).



- விளக்கமின்றி (definition) எந்தத் துறையும் முன்னேற முடியாது.
- அப்படி ஆரம்பத்தில் சரித்திரம் மன்னர் வாழ்வாகக் கருதப்பட்டது விஞ்ஞானத்தால் மக்கள் வாழ்வாகக் கருதப்பட்டது.
- இன்று வரை முன்னேற்றம் (development) என்பதற்குத் தெளிவான விளக்கமில்லை. டெக்னாலஜியை முன்னேற்றமெனக் கருதுகிறார்கள். அதனால் பூமியின் சூழல் பாதிக்கப்பட்டது. மனித முன்னேற்றமே முன்னேற்றம் என உலகம் இன்று வரை முழுமையாக ஏற்க முடியவில்லை.

ஆன்மீகம் வளர்ந்த நாடு இந்தியா. வேதம் ஆரம்பம். உபநிஷதம் உச்ச கட்டம். கீதை கிரீடம் என நாம் கொள்கிறோம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் எழுதிய நூல் *The Life Divine.* இவற்றிற்கெல்லாம் புதிய உயர்வும், அகன்ற அலங்காரமும் தர முயல்கிறது. அதில் முக்கியமானது, அஞ்ஞானத்திற்குரிய விளக்கம் (definition).

***ஒரு துறையின் முன்னேற்றம் அதன் முக்கிய அம்சங்களின் விளக்கத்தைப் பொறுத்தது. அது போல் ஆன்மீகத்திற்கு முக்கியமானது: அஞ்ஞானம்.***

இறைவன் சிருஷ்டித்த உலகில் மரணம், நோய், துன்பம், கொடுமை, அநியாயம் ஏனுள்ளது என்பது தொன்றுதொட்ட நாளாக எழுந்த கேள்வி. இக்கேள்விக்கு முடிவான பதில் இதுவரையில்லை. இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தால், இருளால் நமக்குத் தொந்தரவில்லை என்பது வேதம். இறைவனை நாடி மோட்சம் தேடுபவனை இருள் தொடராது என்பது உபநிஷதம். அகந்தை கரையுமானால் இருளிலிருந்து விடுதலை பெறலாம். இருள் என்ன என்ற கேள்வி எழ வேண்டிய அவசியமில்லை என்பது பௌத்தம்.

சர்வ தர்மத்தையும் சரணடைந்தவனுக்கு மோட்சம் உரியது என்பது கீதை. இறைவன் இருளைப் படைக்கவில்லை, அஞ்ஞானம் அடர்ந்த ஒளியை இருளாகக் காண்கிறது என்பது ஸ்ரீ அரவிந்தம். இதை விளக்க அஞ்ஞானம் என்பது என்ன என்று (definition) விளக்க வேண்டும். இந்த அடிப்படையான விளக்கம் இதுவரை சரியில்லாததால் வேதம் முதல் கீதை வரை இருளுக்குப் பதிலில்லை.

இறைவனை அறிவது ஞானம். அறியாதது அஞ்ஞானம் என்பது வேதம். தத்துவம் இறைவனில் ஆரம்பித்து இறைவனில் முடிகிறது, உலகம் ஒதுக்கப்பட்டது. அதனால் இருளுக்குப் பதிலில்லை. இறைவனை அறிவது ஞானம். உலகத்தை அறிவது அஞ்ஞானம் என்பது உபநிஷதம். இது வேதத்தைக் கடந்த நிலை. இவற்றிடையேயுள்ள தொடர்பு குறிப்பிடவில்லை. தொடர்பு தெரியவில்லை. தொடர்பு தெரியாமல் புரியாது.

ஞானம் லீலைக்காகத் தன்னை அஞ்ஞானமாக மாற்றியது என்பது ஸ்ரீ அரவிந்தம். அஞ்ஞானத்திலிருந்து எழும் ஞானம் சச்சிதானந்த ஆனந்தத்தைப் பெரிதும் வளர்க்கவல்லது. இறைவன் அந்த வளரும் ஆனந்தத்தை நாடி உலகை, உலகில் இருளை சிருஷ்டித்தான் என்ற புது விளக்கம் பகவான் கொடுப்பது. இப்புது விளக்கத்தின் அடிப்படையில் எழும் வாழ்வு தெய்வீக வாழ்வு. அதுவே ஸ்ரீ அரவிந்தத்தின் இலக்கு. அதை விளக்குவதே *The Life Divine* லைப் டிவைன் என்ற நூல்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வாழ்வின் அமைப்பு முறைக்கு அஸ்திவாரம் ஜடத்தின் தூய்மையான 'நாணயம்'.



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

216. *குறை குடம் கூத்தாடும்.*

**குறை நிறைவாகும்.**

217. *ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்.*
*பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும்.*

**ஆடிக் கறக்கின்ற மாடு ஆடாமல் கறக்கும்.**

218. *முதற் கோணல் முற்றும் கோணல்.*

**முதற்கண் வெற்றி, முடிவான முழுமையான வெற்றி.**

219. *பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு.*

**அன்பர் மனம் அருள், அடுத்தவர் மனம் இருள்.**

220. *கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்.*

**அருள் வரும்பொழுது, அனைத்துத் தடைகளையும் மீறி வரும்.**

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சில்லறை ஆசைகள் உயர்ந்த இலட்சியமாக, மறுக்க முடியாதவையாக எழுவதுண்டு. நம்மில் ஒரு பகுதி - எவ்வளவு சிறியதானாலும் - சில்லறையாக இருந்தால் அப்படியிருக்கும்.

# பெருமாள் டைலர்

P. நடராஜன், சிதம்பரம்

இரவு 10 மணி, சனிக்கிழமை. அழைப்பு மணி ஒலிக்க, கதையைப் படிக்கத் தொடங்கிய சந்துரு புத்தகத்தை மடித்து வைத்துவிட்டு கதவைத் திறந்தான்.

"Hey! பாபு! வா, வா. யப்பா எவ்வளோ வருஷமாயிடுத்து உன்ன பார்த்து" என வீட்டிற்கு வந்த பள்ளிக்கூடத் தோழனான பாபுவை வரவேற்றான் சந்துரு.

"ம்... வரேன்... வரேன்... தூங்கலயா? Freshஆ இருக்க?"

"இப்பத்தான் Prayer முடிச்சுட்டு, அன்னை இலக்கியத்தை படிக்கலாமென்று உட்கார்ந்தேன். என்னடா தொந்தியும் தொப்பையுமா! முகத்தை பார்த்துதான் அடையாளம் கண்டுபிடித்தேன்'' என்று பாபுவின் உருவத்தை விமர்சனம் செய்தான் சந்துரு.

"தொந்தி, தொப்பை தனித்தனியாகவா இருக்கு? ஒரே sizeஆ six packupsப் பதிலாக single bagஆ இருக்கு. உட்கார்ந்தே செய்கிற வேலை, மேலும் நேரம் சென்று சாப்பாடு சாப்பிட்டா இப்படிதான்" என்று காரணம் சொன்னான் பாபு.

"Joke எல்லாம் இருக்கட்டும். வேலையெல்லாம் எப்படி இருக்கு?"

"சொல்லும்படியா என்ன, machine life, computer machine கூட. ரெட்டியார் மெஸ் ஆட்டுகல்ல நகர்த்தர வேலையா இருந்தா பட்டணம் பொடி விளம்பரத்துக்கு மாடலா ஆகியிருப்பேன். Mouse நகர்த்தர வேலை, animation work, நேரம் தவறி சாப்பிடறது, தூங்கிறது, இதான் ரொட்டின்".



"சரி, சாப்பாடு ஆச்சா? கேட்க மறந்துவிட்டேன்".

"ஆச்சு, அடுத்து என்ன? தூங்க வேண்டியதுதான். ஆபீஸ்ல (promotion) பிரமோஷன் பிரச்சனை. எனக்குக் கீழ் இருக்கறவன் மேல போகப் போறான். SSLC சர்டிபிகேட் xerox எடுத்தேன். உன் ஞாபகம் வந்தது. அதான் relaxஆ உன்ன பார்க்கலாம் என்று Monday leave போட்டுட்டு வந்தேன். காலையில பேசுவோம்".

"சரி, சரி, தூங்கப் போகும் போது அதிருப்தி வேண்டாம்" என்று அமைதிப்படுத்தினார் சந்துரு.

"சந்துரு, என்ன ஏதாவது home facial? ராத்திரி 10 மணிக்கும் பளிச்சென்று இருக்க?"

"அதெல்லாம் ஒன்னும் இல்ல. தினமும் 9.30 மணிக்கு Sri Aurobindo's Life Divine ஓரிரு பக்கங்கள் படிப்பேன். சத்தான விஷயம் படிச்சா முகத்துல களை வருமாம். அதான்.... Function எதுக்கோ attend பண்ண வந்துருக்கன்னு நினைச்சேன். என்னப் பார்க்கத்தான் வந்திருக்கன்னு தெரிஞ்சதும் சந்தோஷமாக இருக்கு" என்று கூறி தூங்கப் போயினர் நண்பர்கள் இருவரும்.

ஞாயிறு காலை உணவு அருந்திக்கொண்டே பேச்சைத் தொடர்ந்தனர்.

"உன் வேலைகள் பாதிக்காம உன்கூட இருக்கணும் என்று நினைக்கிறேன் சந்துரு" என்றான் பாபு.

"சரி பாபு. காலை 9 மணியிலிருந்து 10.30 வரை அன்னை தியான மையத்துல தியானக் கூடல். விருப்பம் இருந்தா வா, இல்ல ஊர சுற்றி பார்த்துட்டு 11 மணிக்கு வீட்டிற்கு வந்துடு. என்ன சொல்ற?"

"நானும் வரேனே. வரலாமா இல்ல Members மட்டுமா? என்னுடைய single bag குறைய யோகப் பயிற்சி இருக்குமா?" என்று கேள்விகளை அடுக்கினான் பாபு.

"தாராளமா வா பாபு. ஆர்வமிருந்தா யார் வேண்டுமானாலும்

கலந்துக்கலாம். நினைவால அன்னையை வழிபடுவோம். சொற்பொழிவு இருக்கும். பின்னர் தியானம் ½ மணிநேரம்”.

மையம் மெல்லிய நறுமணம் கமழ அழுத்தமான பேரமைதி அவர்களை அரவணைத்து வரவேற்றது. மையமாய் ஸ்ரீ அரவிந்தர் அன்னை திருவுருவப்படங்கள் மேடையில் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

நண்பர்கள் அமைதியாய் அகத்தில் ஆழ்ந்தவர்களாய் தனித்தனியே பிரிந்து அமர்ந்தனர்.

மணி 9.00. அன்னை மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் நூல்களிலிருந்து வாசித்தார் ஒருவர். பின்பு கூட்டத்தின் மத்தியிலிருந்து ஒருவர் எழுந்தார். அழகாய் கை தட்டினார்.

‘‘ஸ்ரீ அன்னையையும் பகவான் ஸ்ரீ அரவிந்தரையும் நினைவால் ஏற்று வழிபட கூடியுள்ளோம். அன்னை வழிபாடு அக வழிபாடு. இங்கு அகம் மட்டுமே பூஜைப் பொருள் நிவேதனம். Mother என்றால் இனிமை. Sweet... Sweet Mother... இனிப்பு உங்கள் அகத்தில் செய்ய காரம் (காரப்பொடி) தேவையில்லை இந்த அரங்கில் அகம் மட்டுமே குடிகொள்ளட்டும். அகங்*காரம்*, அதி*காரம்* ஆகிய இரண்டு காரங்களையும் வெளியே அனுப்பி, கரைத்துவிடுவோம். கொஞ்ச நஞ்ச காரத்தையும் இனிப்பில், அன்னையெனும் இனிப்பில் கரைத்துவிடுவோம். காரங்கள் களைந்து, இனிமையான அகத்திற்கு மட்டுமே இங்கு வேலை; அனுமதி.

நாம் எல்லோரும் தொழில் புரிகிறோம், எதற்காக? பணத்திற்காக, உலகில் வேண்டியதை பணத்தால் பெறுவதற்காக. நினைத்தது எல்லாம் பெறக்கூடிய வகையில் பணம் சம்பாதிக்கிறோமா? பற்றாக்குறை. Part-time job செய்யலாமா? Company jump over, business change என்றெல்லாம் தெரிந்து, அறிந்து, முறைகளில் முயல்கிறோம். உண்மையில் பற்றாக்குறையாக இருப்பது நம் குணம், சுபாவம். உதாரணமாக tailor கடையை



10 வருடமாக வைத்திருக்கார் ஒருவர் என்றால், இன்று அவரது கடை எப்படி இருக்க வேண்டும்? வேலைக்கு 50 tailors, 5 branches, readymade showroom என விரிந்து பரவியிருக்க வேண்டும்.

முன்பெல்லாம் பண்டிகை வந்தால் வேலை அதிகமாக இருக்கும். இப்பொழுது நிலைமை என்ன? Market என்ன?

New year, school uniform, company uniform, gas company, petrol bunk, security services என uniform தைக்க வேண்டியுள்ளது. கட்சிகாரர்கள் வெள்ளை ஆடை என பரந்து விரிந்துள்ளது tailorக்கான வேலை, தேவைகள்.

இவ்வாறாக demand இருக்க, 10 வருடக் கடை இன்னும் வேலைக்கு ஆளில்லாமல் குடும்பக் கடையாக, jacket பீஸ் தைப்பதிலேயே அடங்கியுள்ளது என்றால் என்ன அர்த்தம்...” என்று யதார்த்தமாக பேசத் தொடங்கினார் சொற்பொழிவாளர்.

தியானம் முடிந்து நண்பர்கள் தியான அரங்கிற்கு வெளியே இணைந்தனர்.

“Thanks சந்துரு. நிம்மதியாக இருக்க நடந்தே போலாமா வீட்டுக்கு. வரப்போதான் autoல வந்தோம்” என்றான் பாபு.

“சந்துரு, சொற்பொழிவுல tailor உதாரணம் சொன்னப்போ எனக்கு நம்ம school பக்கத்துல பெருமாள் டைலர்னு கடை வைச்சிருந்தாரே, அவர் ஞாபகம் வந்தது. அப்பவே அவருக்கு 35 வயதுக்கு மேல இருக்கும். கடை இன்னும் இருக்கா?”

“ம், இருக்கு பாபு. இடம் மாறிவிட்டார் பக்கத்து தெருவுல”.

“Develop ஆயிட்டாரா?”

‘‘இல்ல. நம்ம 30 வருடத்திற்கு முன்னால எப்படி பார்த்தோமோ அதே setupதான். ஓட்டுக் கட்டிடத்துல வாடகை இடம், குறுகிய இடம், இரண்டு மெஷின்களோட”.

“அவருக்கே இரண்டு பையன்களாச்சே, develop ஆகலன்னு

சொல்லறது ஆச்சரியமா இருக்கு சந்துரு".

"ஒரு பையன் சண்டை போட்டுகிட்டு அடுத்த தெருவுல அப்பா மாதிரியே setupல கடை வைச்சிருக்கான். வாசல்ல செங்கல்லு வச்சு, அதுக்கு மேல வளையல் பெட்டி, கைக்குட்டை விற்க தோரணம், வாரத்தில ஒரு சண்டை வாடிக்கைகாரர்களோட, newspaper படிச்சிட்டு, வெட்டிக்கதை கூட்டம், ஓட்டை சைக்கிள், கடைக்கு நுழையுமுன் கால் கழுவுவாரே டைலர் அதே இரும்பு வாளி, அளவு எடுக்கற வேலை இல்ல, jacket தைக்கிற வேலை, கடைக்கு வெளியிலேருந்துதான் தைக்க கொடுக்கனும், எதுவும் மாறலை" என்று விவரித்தான் சந்துரு.

"கண்ணாடி கதவு, air-conditioned இருக்கிற இந்த காலத்துல 30 வருஷமா அதே வறுமைல இருக்கிற பெருமாள் டைலர் மாதிரிதான் நானும் இருக்கேன் சந்துரு. Office timeல பக்கத்துல இருக்கிறவன்கூட விடுதலைப்புலி பிரபாகரன் உயிரோட இருக்காரா, இல்லையான்னு அரட்டை அடிக்கறது, break timeலயும் அரட்டை, superiorsகூட சண்டை, teamல misunderstanding, பிரமோஷன் மட்டும் service year வச்சி எதிர்பார்க்கிறேன். என்கிட்டதான் குறை. அப்பறம் ஏன் எனக்கப்புறம் வேலையில சேர்ந்தவனுக்கு பிரமோஷன் தரமாட்டாங்களா என்ன?" என்று உணர்ந்தவனாக பேசினான் பாபு.

"பாபு, எனக்கும் நான் செய்யற தவற்றை உணர்த்தியது சொற்பொழிவு. காலேஜ்ல tutorஆக இருக்கேன். Tea கடையில போய் மசால்வடை சாப்பிட்டு, tea குடிச்சிட்டு, class எடுக்கறத hobby மாதிரி செய்தா பலன் எப்படி இருக்கும்?" என்று தானும் உணர்ந்தவனாய் பதிலுக்குப் பேசினான் சந்துரு.

"Sincereஆ இருக்கனும் வேலையில அப்படின்னு தீர்மானம் செய்திருக்கிறேன் சந்துரு. சாப்பிடற சாப்பாடு உடம்பதான் வளர்த்திருக்கு. சொற்பொழிவு என்னோட மனதை வளப்படுத்திருக்கு. தேங்ஸ் சந்துரு".



"எனக்கும்தான் தெளிவு கிடைச்சிருக்கு பாபு".

"Cell phone ஒலிக்க, பாபு எடுத்து தன் cell phoneல பேசினான். முகம் மலர்ந்தான். நன்றி கூறினான்".

"சந்துரு, good news! என்னோட managerதான் call பண்ணினார். என்னை வேற teamக்கு seniorஆக promote செஞ்சிருக்காங்களாம். என்னோட communication problem, சண்டை எல்லாம் industryல சகஜம். பொறுப்பு கொடுத்தா சரியாகிவிடுவார். Experienced staff demotivateஆகிட கூடாதுன்னு managementல தீர்மானிச்சு இந்த promotion எனக்கு கொடுத்திருக்காங்கலாம்" என்று மலர்ந்து கூறினான் பாபு.

"ரொம்ப happyடா பாபு. வாழ்த்துகள்" என்றான் சந்துரு. இடம் மாறிய பெருமாள் டைலர் கடையை நண்பர்கள் பார்த்தனர். ஞாயிற்றுக்கிழமை கடை திறந்திருந்தது. வாசலில் ஒரு பெண்மணி சண்டை போட்டுக்கொண்டிருந்தார். பெருமாள் டைலரிடம், "கல்யாணத்துக்கு போட்டுட்டு போகணுன்னு உங்ககிட்ட ஜாக்கெட் தைக்க கொடுத்தா, கடை வாசல்ல நின்னுதான் தைச்சு வாங்கிட்டு போகணுமா, வெள்ளிக்கிழமை கொடுக்கிறதா சொன்னீங்க இல்ல".

பதில் ஏதும் பேசாமல் நரைத்த தலையுடன் தைய்த்துக் கொண்டிருந்தார் பெருமாள் டைலர். இடம் மாறினாலும் நடத்துபவர் சுபாவம் மாறவில்லை என்ற தெளிவு மனத்தில் பட நடந்தனர் நண்பர்களிருவரும்.

*முற்றும்.*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அதிவேகமான செயலை ஆதரிக்கும் மௌனத்தில் காத்திருப்பது பொறுமை.

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**48. பணமும், அதிகாரமும் நம்மை நாடி வருவது - வலிமை சேர்வது.**

- **நாடி வருவது நானிலம் பணிவது.**
- மனிதன் ஜடம்.
- பணம் ஜீவனுள்ளது. அடுத்த கட்டத்திற்குரியது.
- நம் லோக சக்திகளை நாம் தேடினால் அவை பலிக்கும்.
- அடுத்த உயர்ந்த லோக சக்திகளை - பணத்தை - முயன்று பெற வேண்டும்.
- அது பெரு முயற்சி.
- அதனால் பணமுடையவனுக்கு மரியாதை.
- அப்படியிருக்க எப்படி ஒருவனைப் பணம் நாடி வரும்?
- பதவி அதைவிட சற்று உயர்ந்தது.
- பணமோ, பதவியோ ஒருவரை நாடி வருவது எப்படி, ஏன்?
- **வலிமை அதற்குரியதைக் கவர்ந்து ஈர்க்கும்.**
- வலிமை என்பது என்ன?
- செய்த வேலைக்குரிய பலனுக்கு மேல் உபரி எழுந்து சேர்வது வலிமை.
- வலிமை திறமையிலிருந்து எழுவது.
- திறமை பல வகைப்படும்.
- ஒவ்வொரு திறமைக்கும் உள்ள உபரிக்கு வலிமையுண்டு.
- பல நூறு திறமைகளால், அவற்றின் உபரியால் சேர்ந்தது வலிமை.



- அந்த வலிமை அடுத்த லோகத்திற்குரியது. ஜட உலகிலுள்ள மனிதனுக்கு உயிரில் வலிமை சேரும்.
- அவ்வலிமைக்குப் பணம், பதவி பணியும்.
- வலிமை எல்லா லோகங்கட்கும் உரியது, ஜடம், உயிர், மனம், ஆன்மா.
- ஆன்மீக வலிமை அரிது.
- இருந்தால் வெளியில் தெரியாது.
- தனக்கே தெரியாமலிருக்கும்.
- பணமோ, பதவியோ நாடி வந்தால் ஆன்மீக வலிமையிருப்பதாகப் பொருள்.
- சீசர், அலெக்ஸாண்டர் 20ஆம் வயதில் தலைமைக்கு வந்தனர்.
- நெப்போலியன் 29இல் வந்தான்.
- தலைமை வயதிற்குரியதல்ல, வலிமைக்குரியது.
- வெளிநாட்டுப் பட்டம் பெற்றவருக்குத் தலைமை வீட்டில், ஆபீசில், கட்சியில் அதுபோல் வருவதுண்டு.
- தேடிப் போய் கிடைப்பதே பண விஷயத்தில் அரிது.

  அது நாடி வருவது அரியதில் பெரியது.
- **அரியதில் பெரியது ஆன்மா.**

  ஆன்மாவை அவை தேடி வருவது யோகம் பலிப்பதாகும்.
- 1950இல் மத்திய மந்திரி புதுவை பெரியவர்களைக் கூட்டி, சர்க்கரை ஆலை ஆரம்பிக்க அழைத்தார். எவரும் முன் வரவில்லை.
- 1980இல் ஒரிஸாவில் 5 இலட்சம் பணமுள்ளவரில்லை.
- பணம் அரிது.
- அரிதான பணம், அபூர்வமான பதவி ஒருவரைத் தேடி வருவது வாழ்வில் காணக் கிடைக்காதது.

- அது நடந்தால் அவருக்கு ஆன்மீக விழிப்புண்டு எனப் பொருள்.
- அவ்விழிப்பிற்கு யோகம் பலிக்கும்.
- பலிக்கும் வாய்ப்பு அரிது.
- அது இருந்து நடைமுறையில் பலிப்பது அதனினும் அரிது.
- நான் அதை ***பூரணயோக வாயில்*** என்றேன்.
- எனக்கு வரும் கடிதங்களில் ஏதோ சிலவற்றுள் அந்த அம்சமிருப்பதை நான் காண்கிறேன்.

*தொடரும்.....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சிப்பந்தியின் நாணயம் அதிகாரியின் அதிகாரத்தைப் பொறுத்தது.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அதிகாரியின் அதிகாரமில்லாத நேரமுள்ள நாணயம் நாட்டின் வழக்கிலுள்ள நாணயம். தனிப்பட்ட-வனுடைய சுபாவமான நாணயம்.

***அதிகாரமில்லாத இடத்து நாணயமே நாணயம்.***





## Sri Aurobindo's story of the 4 clocks stopping *(Volume V, 1964, Page 145)*

### பகவானுடைய 4 கடிகாரம் நின்ற கதை

1938இல் பகவான் தொடை எலும்பு முறிந்துவிட்டது. இரவில் பாத்ரூம் போய் வந்தவர் அவர் அறையில் உள்ள புலித்தோலிலிருந்த புலித்தலையின் மீது இடறி விழுந்து எலும்பு முறிந்தது. அவருக்கு நடக்காது, நடக்க முடியாது. அன்னை தீய சக்திகட்கு எப்பொழுதும் பலியாகக் கூடியவர். அதனால் பகவானுடைய கவனம் (concentration) முழுவதும் அன்னையின் தலையைச் சுற்றியிருக்கும். அந்த நிலையில் அவர் தாக்குதலுக்குட்-பட்டார். அந்த நாளில் அன்னை மாலையில் காரில் வெளியில் போவார். கடலூர், விழுப்புரம், சிதம்பரம் வரை போவதுண்டு. ஒரு முறை மாயவரம் போய் ஆதீனத்தைக் கண்டார். அவரை அசுரனாகக் கண்டார். சிதம்பரம் கோயிலுக்கு ஒரு முறை வந்திருக்கிறார். கடலூரில் கார் ரிப்பேர் ஆனதால் ஆலம்பூண்டி பாஷியம் ரெட்டியார் வீட்டில் 3 மணி நேரம் தங்கியிருந்தார். வீராம்பட்டினம் திருவிழாக் கூட்டத்தில் கார் நின்றபொழுது வீராம்பட்டினம் காளி அன்னையிடம் வந்து, ''இன்று நீங்கள் வந்ததால் எனக்கு வழக்கமாக வரும் கோழிப் பலி அதிகமாயிற்று. அடிக்கடி நீங்கள் வர வேண்டும்'' என்று விண்ணப்பித்தார். தன்னைப் பகவானுக்கு முழுமையாகச் சரணடைந்தாலும், அன்னையின் சுபாவம் எதற்கும் கட்டுப்பட்டதல்ல. பகவான் கூறியதை எதையும் மீறும் எண்ணமில்லாவிட்டாலும், அவர் சுபாவம் இயல்பாக அனைத்தையும் மீறும். ஒரு முறை கார்

நின்றுவிட்டது. அன்னை காரிலிருந்து இறங்கி பகவானை நோக்கினார். கார் புறப்பட்டது. பகவான் சூழல் புதுவையிலிருந்து 7½ மைல் வரையிருப்பதாக பகவான் கூறியது அன்னைக்கு நினைவு வந்தது. பகவானை, சூழலைக் கடந்து போக முயன்ற பொழுது கார் நின்றுவிட்டது. உதார் என்ஜினைப் பரிசோதனை செய்தார். எந்தக் கோளாறும் இந்த இன்ஜீனியருக்குப் புலப்படவில்லை. அதன் பிறகே அன்னை பகவானை நாடினார். 6.30 மணிக்கு அன்னை திரும்புவது வழக்கம். 6.30 மணிக்கு அன்னை திரும்பாவிட்டால் பகவான் ஜன்னலிடம் வந்து கார் வந்துவிட்டதா எனப் பார்ப்பதுண்டு என அங்கு வேவு பார்க்கும் CID வக்கீலிடம் கூறினான்.

> ***அன்னை லோக மாதா. அவரைத் தீய சக்திகள், ஆபத்திலிருந்து காப்பாற்றுவதைத் தன் முதற் கடமையாகக் கொண்டவர் பகவான். அதனால் ஏற்பட்டதே இந்த விபத்து.***

சென்னையிலிருந்து முதன் மந்திரி இராஜாஜி 6 டாக்டர்களை அனுப்பியிருந்தார். எலும்பு கூடியபின் நடப்பது அவசியம் என டாக்டர்கள் கூறியதால், பகவான் நடக்க ஆரம்பித்து தினமும் 10 மணி நேரம் வரை நடந்தார். அவருடைய அறையிலிருந்து பவித்ரா அறை - கார் நிற்பதற்கு மேல் - வரை நடப்பது வழக்கம். அப்பொழுது இரு முனைகளிலும் இரு கடிகாரமும், இடையே இரண்டு கடிகாரங்களையும் வைத்திருந்தார்.

சந்திரநாகூரிலிருந்து நளினி, சீனுவாச அய்யருடன் புதுவை வந்து 1910இல் சங்கர செட்டியார் வீட்டிலும், பிறகு guest house கெஸ்ட் அவுஸ் என்ற வீட்டிலும், முடிவாக தற்போதைய ஆசிரமம் கட்டிடத்திலும் தங்கியிருந்தார். அன்னை 1914இல் வந்தபொழுது கெஸ்ட் அவுஸில் சந்தித்தார். 1920இல் தற்சமயம் ஆசிரம



கட்டிடத்திற்கு வந்துவிட்டார். அன்னை வந்தபொழுது பகவான் அறை பெருக்கப்படுவதில்லை. குப்பை, தூசி, பேப்பர், சுருட்டுத் துண்டு சிதறிக் கிடக்கும். அன்னையே பெருக்க ஆரம்பித்தார். சுத்தத்தை முக்கியமாகக் கடைபிடிக்கும் கொள்கைக்கு இது நேர் எதிரானது. நடக்கும் பொழுது அது போல் ஒரு கொள்கையைக் கடைபிடித்தார். **நடக்கும் தூரத்தை 4 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரே நேரம் தேவை என்பது கொள்கை**. இந்த (precision) துல்லியமான முறை Supramental perfection சத்திய ஜீவிய சிறப்பை எட்ட உதவும் என்பது அவர் கொள்கை. இக்கொள்கையின் இரகஸ்யத்தை அறிந்தவரால் சிறு காரியம் செய்து மலை போன்ற பெரிய பலனை அடைய முடியும். நவம்பரில் வாஷிங்டனில் உள்ள கூட்டத்திற்குப் போக விசா ஆகஸ்ட் மாதம் கேட்டவருக்கு இன்டர்வியூ ஜனவரியில் வந்தது. அவர் அந்த சமயம் ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தார். மேற்சொன்ன தத்துவ இரகஸ்யம் அறிந்த அன்பர் ‘இக்கட்டுரையை குறித்த நேரத்தில் எழுதி முடித்தால் விசா கிடைக்கும்’ என்றார். அப்படியே நடந்தது.

தீய சக்திகட்கு இந்த இரகஸ்யம் தெரியும். அவை 4 கடிகாரங்களையும் நிறுத்திவிட்டன. பகவான் ஒரு நிமிஷம் நடப்பதை நிறுத்தி, “இது என்ன தவறான விளையாட்டு?” என்றார்.

- சுபாவத்தின் இந்த இரகஸ்யத்தை அறிந்தவர் பேராபத்து-களின்று மயிரிழையில் தப்பிப்பார்.
- அப்படிப்பட்டவருடைய சிறு முயற்சிக்கு மலை போன்ற மகத்தான பெரும்பலன் தேடி வருவது உலக அனுபவம்.
- இடைவிடாது மனத்தின் ஆழம் அன்னையில் லயித்திருப்-பவர்க்கு இந்த அம்சம் இயல்பாக எழும்.

❁❁❁

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/31) வெட்கமின்றி கேட்பது உணர்வின் கர்வமாகும். அதை ஏற்பது கண்மூடித்தனமான பாசமாகும்.**

- **பாசம் வெட்கமில்லாத உணர்வை விரும்பி ஏற்கும்.**

- உலகமும், ஊரும் பல முறைகளைச் சட்டமாக ஏற்பது நாகரிகம் வளர்வது.
- மரியாதையாகப் பேசுவது நல்ல பழக்கம். பிரியமாகப் பேசுவது இனிமையானது.
- மரியாதை கலந்த பிரியம் இயல்பாக அமைவது நாகரிகம் உள்ள சமுதாயம்.
- அந்த ஊரில் மரியாதையில்லாமல், முரட்டுத்தனமாக எவரும் பேசமாட்டார்கள்.
- அப்படிப் பேச வெட்கப்படுவார்கள்.
- சட்டத்தை மீற, முறையை விட்டுச் செயல்பட, நாகரிகமின்றி நடக்க வெட்கப்படுவதுண்டு.
- அநாகரிகமான ஊரிலிருந்து வந்தவரும் அந்த ஊரில் உள்ளவரை நாகரிகமாக நடப்பார்.
- வெட்கம் என்பது சொரணை.
- அனைவரும் பரம்பரையாய் ஏற்ற நல்ல பழக்கத்திற்கு மாறாக நடப்பதற்கு வெட்கப்படுவார்கள்.
- அந்த வெட்கமில்லாதவர்,
  - என்னைச் சாப்பிட அழைக்கமாட்டேன் என்கிறீர்களே,



  - வெறும் கையோடு வந்திருக்கிறீர்களே, ஒன்றும் கொண்டு வரவில்லையா?
  - என்னை சினிமாவுக்கு அழைத்துப் போங்களேன்,

  எனக் கேட்பார்கள். நீங்கள் என்பதற்கு நீ எனப் பேசுவார்கள். இதெல்லாம் நாம் எளிதில் காண முடியாது.
- மருமகன் உங்கள் அப்பா எனக்கு ஒன்றும் தரவில்லையே என மனைவியைக் கேட்க வெட்கம் கெட்டவனாக இருக்க வேண்டும்.
- வெட்கம் கெட்டவர் குறைவு, ஆனால் உண்டு.
- அவர்கள் எவருக்கும் எதுவும் செய்யமாட்டார்கள், எல்லோரும் ஏதாவது தனக்குச் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பார்கள், சமயத்தில் கேட்டுவிடுவார்கள். உங்கள் சொத்தில் பாதியைக் கொடுங்கள் எனவும் ஒருவர் கேட்டுவிட்டார்.
- கம்பனியில் பார்ட்னராக வர, 5 ஆண்டுக்குப் பின் முழு கம்பனியும் தனக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டவர் ஒருவர்.
- எனக்குப் புதுவையில் வாடகையில்லாமல் வீடு வேண்டும் என ஒருவர் கடலூரில் உள்ளவர்க்கு எழுதினார்.
- அட்மிஷன் கேட்பார்கள், சிபார்சு செய்யச் சொல்வார்கள், மார்க் போட்டு பாஸ் செய்ய வேண்டும் என்பார்கள், ஆபீஸ் இரகஸ்ய பைலைப் பார்க்க வேண்டும் என்பார்கள்.
- வெட்கம் கெட்டவர் எதையும் கேட்பார்கள். எதுவும் கிடைக்காது என்றாலும் கேட்டபடியிருப்பார்கள்.
- உறவு, நட்பில், நெருங்கிய உறவு, அந்தரங்க நட்பிலும் கேட்கக் கூடியதுண்டு, கேட்கக் கூடாததுண்டு.
- பாசம் என்ற பெயரால் அதில் பலவற்றை ஏற்பதுண்டு.

* வெட்கம் கெட்ட சுயநலத்திற்குப் பாசம் ஒரு போர்வை.

  பாசத்திற்காக அது போன்ற வேண்டுகோளை ஏற்பவர் ஒரு நேரம் இது பாசமில்லை, சுயநலம் என அறியும்பொழுது மனம் உடைவார்கள்.

* அப்படிப் பெறுபவர், கொடுப்பவரை ஏமாந்தவர் என நினைப்பாரே தவிர, பெருந்தன்மையுடையவர் எனக் கருதமாட்டார்.
* மகளுக்கே தாய் அளவுக்கு மேல் கொடுக்கப் போவதில்லை. என்றாலும் கேட்பவர் கேட்பதை நிறுத்தமாட்டார்.
* பார்த்தவரெல்லாம் எதையாவது கேட்கும் ஊரிலிருந்து எவரும் எதுவும் கேட்காத ஊருக்கு வந்தவருக்கும், அந்த ஊரிலிருந்து இந்த ஊருக்கு வந்தவருக்கும் ஏற்படும் அனுபவம் விவரிக்க முடியாதது. அனுபவிப்பவரால் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது.
* கேட்க முடியாதது தெய்வீக குணம். தெய்வம் அவரை நாடி வரும்.

***

## II/32) பகவான் அன்னை எழுதியவற்றைச் சத்திய வாக்காக ஏற்பது யோகமாகும்.

☆ **எழுத்தை ஏற்பது யோகம்.**

* வேத வாக்கு சத்திய வாக்கு.
* சத்தியம் ஆன்மாவின் புறம்.
* பிரம்மம் சிருஷ்டித்த முதல் நிலை சச்சிதானந்தம்.
* சச்சிதானந்தம் சத்தின் முழு உருவம்.
* சத் என்பது சித்.



* சத் சித்தாக இருப்பது ஆனந்தம்.
* சத் சத்தாகவே இருக்கலாம், சித்தாக இருக்கும் அவசிய-மில்லை.
* ஒரு கவிஞர் மனிதன், கவித்திறன் பெற்றவர்.
* அவருக்குக் கவி எழுதும் திறனிருப்பதால் கவியாக வேண்டும் என்ற கட்டாயமோ, நிபந்தனையோ இல்லை. அவர் இஷ்டப்பட்டு கவியாகலாம், ஆகாமலிருக்கலாம்.
* சத் சித்தாவது ஆனந்தம். சத் ஆனந்தத்தில் சித்தாகிறது.
* சத் என்பது அகமும் புறமுமாகப் பிரிந்தால் அகம் ஆன்மா, புறம் சத்தியம்.
* மனிதன் சத்தியத்தை அகத்தில் நாடினால் ஆன்மாவின் ஆதிக்கம் ஜீவனில் எழும்.
* மேலும் சத்தியமும் அகமும் புறமுமாக மாறும்.
* அதன் அகம் காலம், புறம் இடம்.
* காலத்திலும், இடத்திலும் சத்தியம் செயல்படுவது இயற்கை, பிரகிருதி.
* பிரம்மம் அகமும், புறமுமாகப் பிரிவது சிருஷ்டி.
  * பிரம்மம் அகம், புறமாகப் பிரிவது முதல் நிலை.
  * அது பிரம்மம், சத்தாவது - சத் புறம் - அடுத்த நிலை.
  * சத் அகம் புறமாகப் பிரிவது மூன்றாம் நிலை.
  * ஆன்மா அடுத்த நிலையில் அகம், புறமாகப் பிரிகிறது.
  * ஆன்மாவின் அகம் காலம், புறம் இடம்.
  * காலமும், இடமும் உலகம், பிரபஞ்சம், இயற்கை, பிரகிருதி.
* சத்தியத்தைக் கடைபிடிப்பவன் அதன் அகமான ஆன்மாவை அடைவான்.
* சத்தியம் என்பதற்கடையாளம் பிணக்கற்றிருப்பது.

- பிணக்கு பொய்.
- பிணக்கொழிந்த நிலை மெய்.
- மனம் பிணக்கற்று, முரண்பாடற்று, ஒருமையுறுவது சத்தியம்.
- அன்னை மனிதனையும், நாட்டையும், உலகையும் விளித்து,

*"சத்தியம், அன்றில் பாதாளம்"* **என்கிறார்.**

- சத்தியம் இந்திய விடுதலையை அளித்தது.
- சத்தியம் உலகப் போரை வென்றது.
- ஒருவருடைய சத்தியம் சிறப்பானால் உலகைக் காக்க முடியும். - பக்கம் 531, *சாவித்திரி.*

❋❋❋

**II/33) தன் தத்துவம், பயிற்சி ஆகியவற்றைச் சொன்ன பின் காவியமாக அவற்றை இலட்சியக் கருத்தாகவும் பகவான் சொன்னார். சத்திய வாக்காக அவற்றை ஏற்று, இலட்சியவுணர்வாக அவற்றைக் கிரகித்து, யோகப் பயிற்சியாக உள்ளத்தில் வைப்பது பூரணயோகமாகும்.**

☆ **தத்துவம் காவிய ரூபமாக சத்தியமாகிறது.**

- அறிவு மனத்தில் உறைவது, உடலில் ஆரம்பித்து வளர்ந்து உணர்ச்சி வழியாக அறிவை எட்டி ஆன்மாவை அடைகிறது.
- அறிவு உடலையும் உணர்ச்சியையும்விட உயர்ந்த சிகரம்.
- என்றாலும் சாதிக்கும் திறன் உடலுக்கு முழுமையாகவுண்டு. உணர்வுக்கும் ஓரளவுண்டு.
- அறிவு தெளிவு பெற்றது. சாதிக்கும் திறனற்றது.
- தெளிவின் சிகரம் மனத்தின் அறிவு.



- சாதனையின் முழுமை உடலுக்கும், ஓரளவு உணர்வுக்கும் உண்டு.
- உணர்வு ஓரளவு அறிவின் தெளிவையும், உடலின் திறனையும் இணைத்துள்ளது.
- தெரிந்தது, தெரிந்தே பல ஆண்டுகள் இருக்கும்.
- உணர்ந்தது உடனே செயல்படும்.
- செயல்பாடு முழுமை பெற உணர்வு பெற்றதை உடல் பெற வேண்டும்.
- அதற்குப் பல தலைமுறைகளாகும்.
- மரபு வழி வந்ததை முழுமை பெற்று பூரணமாகத் தானே தன்னைச் சாதித்துக் கொள்ளும்.
- *The Life Divine* பேசுவது தத்துவம். நாம் அதனால் தெளிவு பெறுகிறோம்.
- *Synthesis* பயிற்சியை அளிக்கிறது. தத்துவம் நடைமுறை-யாகிறது.
- மூத்த சாதகர்கள் அன்னையிடம் வந்து மேல் நாட்டில் பகவான் நூல் ஒன்றை வெளியிட வேண்டும். அதற்கு *The Human Cycle* சிறந்தது என்றனர். இங்கு வரும் மேல் நாட்டார் அனைவரும் போற்றும் நூல் அது. அன்னை மறுத்து,

  *Synthesis* நெஞ்சைத் தொடும்.

  *The Human Cycle* மனத்திற்குத் தெளிவு தரும்.

  அதனால் *Synthesis* மேல் என்றார்.
- அன்னை சாவித்திரியைப் பற்றிச் சொல்வது:

  சாவித்திரியில் பகவான் அதிகப்பட்சம் சொல்லியிருக்கிறார்.
- *The Life Divine* தெளிவு தரும். நாம் அதை

நடைமுறைப்படுத்த வேண்டும்.

*Synthesis* நடைமுறையைக் கூறுவதால் செயல்படுத்துவது எளிது.

சாவித்திரி தானே தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும் என்றார் அன்னை.

- அறிவு உயர்ந்ததெனினும், தெளிவு சிறந்ததெனினும் பலனைக் கருதும்பொழுது *Synthesis* ம் சாவித்திரியும் பெரியவை.
- *The Life Divine* யைப் படித்துப் பெற்ற தெளிவை *Synthesis*இல் நடைமுறையாகக் கண்டு, சாவித்திரியால் உற்சாகமடைந்து சாதிப்பது முழுமைக்குரியது.
- ஒரு கருத்தை *The Life Divine*இலிருந்து எடுத்து, அதை *Synthesis*இல் உள்ள விளக்கத்தையும், அதன் காவிய உருவத்தை சாவித்திரியிலும் காண்பது ஆரம்பம்.
- நாமே அது போல் காண்பது ஆழ்ந்த பலனை நிரந்தரமாகத் தரும்.
- ஒருவர் பெறும் பலன் பலரிலும் தானே வெளிப்படும்.

✲✲✲

**II/34) லௌகீக வாழ்விலிருந்து ஆன்மீக வாழ்விற்குப் போகப் பண்புகள் படிகளாக அமைகின்றன. எந்நிலைக்குரிய பண்பையும் ஏற்கும் திறன் நமக்குண்டு. பண்பை ஏற்பதால் காலம் சுருங்கும். முன்னேற்றத்தையும் முன்பாக முடிக்கலாம். பரிணாம இலட்சியத்தையும் சுருக்க முடியும்.**

☆ **பண்பை ஏற்றால் காலம் சுருங்கி முன்னேற்றம் முடிவில் வரும்.**

- குடும்ப வாழ்வை லௌகீக வாழ்வு, நடைமுறை வாழ்வென்கிறோம்.



- ஆன்மீக வாழ்வு அன்னையை மையமாகக் கொண்டது. மனிதனை மையமாகக் கொண்டதல்ல.
- இரு வாழ்வுக்கும் உரிய பண்புகள் உள.
- பண்பில்லாமல் வாழ்வில்லை.
- ஆன்மீக வாழ்வின் பண்புகளை ஏற்றால் குடும்ப வாழ்வு ஆன்மீக வாழ்வாகும்.
- இவ்விரு வாழ்வுகட்கும் இடையே சில கட்டங்களுண்டு. அவை,
  - தன்னலமான குடும்ப வாழ்வு.
  - தன்னலமற்ற குடும்ப வாழ்வு.
  - இலட்சியமான குடும்ப வாழ்வு.
  - ஊருடன் இணைந்த உயிரற்ற வாழ்வு.
  - ஊருடன் ஒன்றி வாழும் இலட்சிய வாழ்வு.
  - தெய்வத்தை நம்பும் தார்மீக வாழ்வு.
  - ஊருடனும், உலகுடனும் ஒன்றிய இலட்சிய தார்மீக வாழ்வு.
  - ஆன்மீக வாழ்வு.
- ஒவ்வொரு நிலைக்குரிய பண்புகள் உள.
- சுயநலமானவன் வசதிகளைத் தான் அனுபவித்தது போக மீதியைக் குடும்பத்திற்குத் தருவான்.
- சுயநலமற்றவன் நான் கடைசி என்பான்.
- பொய் சொல்லிக் குடும்பப் பெயரை காப்பாற்ற முனைவதும், பொய் சொல்லாமல் குடும்ப உயர்வைப் பாதுகாப்பதும் வேறு.
- இம்மாற்றம் இது போன்ற மாற்றங்கள் எளிதல்ல.
- நாம் எந்த உயர்வை எட்ட வேண்டுமானாலும்

அந்நிலைக்குரிய பண்புகளை மனதில் கொண்டு பின்பற்றினால், அந்நிலையை எய்தலாம்.

நீ படித்த பிள்ளை, மற்றவர் போல் நடக்க முடியாது.

உனக்குத் திருமணமாயிற்று, இன்னும் நீ சிறு பெண்ணல்ல.

பொறுப்பு வாய்ந்த பெரிய வேலைக்கு வந்தபின் அதற்குரியவாறு நடக்க வேண்டும்.

பதவி வந்தபின் முன்போல் நினைப்பது சரியல்ல,

என்பன போல்

***நான் அன்னை அன்பன், முன்போல் நடக்கக்கூடாது என்பது பொருந்தும்.***

- ஆன்மீக உயர்வை எட்டுவது தவம்.
- பண்பு உயர்ந்த உள்ளமுள்ள குடும்பஸ்தனுடைய தவம் - தர்மம்.
- நெருக்கடி வந்த நேரம் நேராக நடப்பது எளிதல்ல.
- ஆபத்தை விட்டு விலகலாம், அது அனைத்தையும் விட்டு விலகச் செய்யும்.
- ஆபத்து, நெருக்கடி, நேரம், சமயம், சந்தர்ப்பம் எழும்பொழுது அதற்குரிய உயரிய பண்பைப் போற்றிப் பணிவது முன்னேற்றம்.

***அது ஆன்மீகப் பரிணாம முன்னேற்றம்.***

***

**II/35) மிக உயர்ந்த பண்பை, மிகச் சிறிய செயலில் ஏற்பது அதிகபட்ச அகவாழ்வின் முன்னேற்றம்.**



☆ **சிறியதில் உயர்ந்ததைக் காண மனம் பெரியதாக இருக்க வேண்டும்.**

- நல்ல பழக்கமும், கெட்ட பழக்கமும் கலந்தேயிருக்கும்.
- எந்த ஒரு நல்ல பழக்கம் அது போன்ற கலப்பற்றிருக்கிறதோ, அதுவே ஒருவர்க்குரிய பழக்கம்.
- நல்லவர்க்கு நல்லவர், கெட்டவர்க்குக் கெட்டவர் என்பவரிடம் கெட்டதும் உண்டு.
- அப்படியுள்ள கெட்டது நேரம் வந்தால் வெளிவரும்.
- எந்த நேரத்திலும் வெளிவராத கெட்டது அவரிடமில்லை எனப் பொருள்.
- பழக்கம் பால் போன்றது. அதில் விஷக்கலப்பு துளியும் அனுமதிக்க முடியாது.
- ரோஜாவுக்கும் முள் உண்டு என்பது மனிதனுக்குப் பொருந்தாது.
- அது உயிரற்ற தாவரம். முள் தற்காப்புக்காக ஏற்பட்டது.
- பழக்கம் பகுதியானது, சுபாவம் முழுமையானது.
- பகுதியான பழக்கம் சமயம் மாறினால், மாறக்கூடியது.
- அரசியலில் இந்தத் தலைவர் மீது ஒரு இலஞ்ச குற்றச்சாட்டுகூட இல்லை என்று ஜனாதிபதி பொதுக் கூட்டத்தில் பேசியபின் அவர் மற்றவர் ஆயிரம், இலட்சம் லஞ்சம் வாங்கிய இடத்தில் கோடி கோடியாக வாங்கினார்.

  அவருடைய நல்ல பெயர் தோற்றம்.
- பெண்ணுக்குப் பெருமையுண்டு என திரு.வி.க. போன்றவர் கூறியதற்கு ஒரு காரணம் ஒரு முறை தவறிய பெண் தன் நல்ல பெயரை இழந்துவிடுகிறாள். அதைக் காப்பது கடினம்.
- இந்தியப் பெண் அந்த நல்ல பெயரை விரும்பிக் காப்பாற்றி,

காப்பாற்றியதற்குப் பெருமைப்பட்டு போற்றி வருகிறாள்.

- ஓர் இலட்சியத்தைப் பின்பற்றுவது எப்படி?
  - ஊருக்காகப் பின்பற்றலாம்.
  - ஏதேனும் ஆதாயமிருந்தால் அதற்காகப் பின்பற்றலாம்.
  - ஆத்ம திருப்திக்காகச் செய்யலாம்.
  - (Perfection) சிறப்பு எய்தச் செய்யலாம்.
- இலட்சியத்தைப் பின்பற்றுவதில் இலட்சியப் பாதையுண்டு, முழுமையுண்டு, சிறப்புண்டு.
- சிறப்பான முழுமையை இலட்சியமாக அடைய மிகச் சிறிய செயலிலும் அதிகப்பட்ச அகவாழ்வின் முன்னேற்றத்தைத் தேட வேண்டும்.
- ஜெர்மனியில் இரயில் ஒரு நிமிஷம் தாமதமாக வாராது.
- எந்தக் காந்தீயவாதியும் மாமிசம் சாப்பிடமாட்டான், புகை பிடிக்கமாட்டான். கதர் உடுக்கத் தவறுவதில்லை.
- இந்திய எல்லைக்குள் எந்தப் பக்கமிருந்து நுழைந்தாலும் ஆன்மீக அமைதி ஆட்கொள்ளும்.
- சந்தன மரம், வெட்டும் கோடரிக்கும் நறுமணம் தரும்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.
- வேத பாராயணத்தில் எந்த ஒரு சொல்லுக்கும் த்வனியின் உயர்வுண்டு.
- திருவாசகம் ஓர் அடி பாடினாலும் நெஞ்சம் உருகும்.
- தாய்மையின் கொடுமையும் மென்மையானது.
- துளசிச் செடியில் இலை, மலர், கிளை, தண்டு என எல்லாப் பாகங்களும் துளசி மணம் பெற்றவை.
- மனிதத் தன்மையுடைய மனம் நெகிழாத நேரமில்லை. நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து



நெகிழும் மனம் மனித மனம்.

✲✲✲

**II/36) இலட்சியத் தலைவர் தம் இலட்சியத்தைப் பரப்ப இளைஞர்களைத் தயார் செய்வது இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை. இலட்சியமாகவே இருக்கிறது. இலட்சியத்திற்கு எதிரானவர் தலைவரைச் சூழ்ந்து இலட்சியத்தையும் தலைவரையும் தங்கள் பிடியில் வைத்து உலகுக்கு எட்டாமல் செய்வதே இன்றுவரை உலகம் கண்டது. அடுத்த தலைமுறையில் இலட்சியம் கூட்டிலிருந்து விடுபடுவதுண்டு.**

☆ **இலட்சியத் தலைவர் இலட்சிய இளைஞர்களை உருவாக்க வேண்டும்.**

- இலட்சியம் என்பது இலக்ஷணம்.
- அது உயர்ந்த மனிதனின் உன்னதக் கற்பனையில் இடம் பெறும். நடைமுறையிலில்லை.
- உலகின் இருளை எதிர்த்து ஆன்மா போராட வேண்டுமானால் (பக்கம் 485 - *The Life Divine*) சொர்க்க லோக இலட்சியவாதி உலகில் வந்து செயல்பட வேண்டும் என பகவான் கூறுகிறார்.
- இலட்சியத்தை ஏட்டுச் சுரைக்காய் எனக் கருதுவதின் உண்மையைப் பகவான் ஏற்கிறார்.
- மனம் இலட்சியத்தை நாடினாலும், செயல் சுயநலமாகவே இருக்கும்.
- தலைமை என்பது காண்பது அரிது.
- தலைமைப் பதவிக்குரியது என்பதால் அதற்கு மரியாதை-யுண்டு, கவர்ச்சியுண்டு.

❁ கல்வி கொள்ளத்தான் குறையாது என்றாலும் கல்வியை, ஞானத்தைக் கொடுக்கும் பரம்பரையிருந்தாலும், கொடுப்பதும் பெறுவதும் குறைவு.

❁ கல்வியில் பதவி, அதிகாரம், பணமில்லை. தலைமைக்குப் பதவியுண்டு, அதிகாரமுண்டு.

❁ பெற்றவர் குறைவு. பெற்றதைக் கொடுப்பவர் கேள்விப்பட்டதில்லை.

❁ விதிவிலக்கானவர் மகாத்மா காந்தி.

❁ அவர் இயல்பாகப் பெற்ற தலைமையை நிராகரித்தார்.

✳ அவர் சுதந்திரம் பெற்றார், வன்முறையை நாடிய இதயங்களில் அன்பை வளர்த்தார். ஹரிஜனங்களுடைய உரிமைக்கு அரசியல் சட்டத்தில் இடம் கொடுத்தார். இந்த நாட்டில் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்தார். ஜனாதிபதி, பிரதமர் பதவிகள் அவருக்குரியவை. அவற்றை அவர் கருதவில்லை. இவற்றைக் கடந்து அவர் நாட்டிற்குச் செய்த ஒரு பெரிய சேவையை உலகம் கருதவில்லை. அது

*தலைவர்களைத் தயார் செய்தது.*

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து அவரை உருவாக்கி உரம் பெற்றவராக மாநிலத்திற்கு அளித்தார். அவர்களே சுதந்தரம் வந்தபின் நாட்டையாண்டனர். அது மகத்தான சேவை.

தமிழ்நாடு - இராஜாஜி,
ஆந்திரா - பிரகாசம்,
பம்பாய் - B.G. கெர்,
வங்காளம் - B.C. ராய்,
உத்தரப்பிரதேசம் - கோவிந்த வல்லப பண்ட்,



ராஜஸ்தான் - சுக்லா,
சிந்து - கிருபளானி,
கேரளா - பட்டம் தாணுப்பிள்ளை,
காஷ்மீர் - ஷேக் அப்துல்லா,
North West Frontier Province - எல்லை காந்தி.

தான் தலைமையை வேண்டாததும், தன் ஸ்தாபனத்தில் பல தலைவர்களை உருவாக்கியதும் உலக சரித்திரம் இன்றுவரை அறியாதது, இது பரநலம். பரநலம் வாழ்க்கை பண்பாகி, வளரும் கலையானது மகாத்மா வாழ்வில். இலட்சியம் இன்னும் தலைவரால் வாழ்கிறது. தலைவர் இலட்சியத்தைப் போற்றாவிட்டால் தொண்டர் வாழ்வு இலட்சியத்தை நாடாது. தலைவரைக் கடந்து இலட்சியத்தைத் தொண்டர் நேரடியாக நாடும் நிலை வரவில்லை.

✳✳✳

**II/37) சிறிய மனிதனுக்குப் பிரபஞ்சத்தை அனந்தன் அளிக்க முன்வந்தால் அனந்தனைத் தன் வாழ்வுள் சுருக்க மனிதன் முனைகிறான். தன்னைக் காப்பாற்றுவதே சரி என்பது அனந்தனுக்கும் மனிதனுக்கும் பொது. இலட்சியமேயானாலும் வலிமையே வெற்றி பெறும்.**

☆ **சிறியதைப் பெரியதாக்க பெரியது தேடிவந்தால் சிறியது பெரியதை சிறியதாக்க முனைகிறது.**

❁ முதல் க்ஷணத்திலிருந்து அன்னை அன்பனுக்குத் தன்னை முழுவதுமாகத் தருகிறார்.

❁ சமர்ப்பணம் பூரணமாகி சரணாகதி பூர்த்தியானால் மனிதன் அருளைப் பெற முடியும்.

❁ எந்தக் காரியமும் சமர்ப்பணம் செய்யப்பட வேண்டும். அந்தச் சமர்ப்பணம் பூரணமாக வேண்டும்.

- சமர்ப்பணம் தவிர வேலையில்லை. அதைப் பூரணம் செய்வதே முதற் கடமை.
- மயிரிழை சமர்ப்பணத்தை உயர்த்துவதும், நாள்கணக்காக வேலை செய்வதும் ஒன்றே.
- நெடுநாள் - பல வருஷ - அனுபவம் சமர்ப்பணம் ஓரிழை உயர உதவும்.
- வேலையைச் சிரத்தை - நம்பிக்கை - யால் செய்ய முதல் மூன்று கட்டங்களையும் - சக்தி, வீரியம், தெய்வப் பிரகிருதி - கடந்திருக்க வேண்டும்.
- மனிதன் சிரத்தையிலிருந்தால், (Divine Shakthi) சக்தி செயலை மேற்கொள்கிறது.
- சக்தி செயலை மேற்கொள்ள முதல் மூன்று நிலைகளைக் கடக்குமுன் இரண்டு முக்கிய கட்டங்களும் அதற்கு முந்தைய நிலைகளும் உள.
- செயலுக்குக் கருவி சிரத்தை - நம்பிக்கை - அடிப்படை சமத்துவம்.
- சமத்துவம் அனந்த ஜீவியம்.
- அனந்தன் நம் வாழ்வில் ஜீவியமாக - சமத்துவமாக - செயல்படுகிறான்.
- நாம் அவனை நோக்கிப் போவதில்லை.
- அவன் நம்மை நோக்கி வந்தபடியிருக்கிறான்.
- தொடர்ந்து விலகிப் போவது நம் கொள்கை.
- நம்மை இறைவன் ஆட்கொண்டபின் நாம் தப்பிக்க முடியாது.
- ஆனால், நாம் அவனை நம் எல்லைக்குள் சுருக்கும் முயற்சியை எடுக்கிறோம்.
- அதுவே நமது பிரார்த்தனை.



- அகந்தை சிறியது, அளவு கடந்தும் சிறியது.
- நாம் அகந்தையை விட்டொழித்து இறைவனை ஏற்றால், அவனுடைய அளவுக்கு வளருவோம்.
- நாம் அகந்தையை விடாமலிருக்கும்பொழுது அவன் உள்ளே வந்துவிடுவதால் அகந்தை அனந்தனைச் சுருக்குகிறது.
- பள்ளிக்கூடம் நடத்துபவருக்கு அன்னை அருள் புரியும் பொழுது பள்ளியை விரிவு செய்யும் வாய்ப்பைத் தருவதில்லை. கல்லூரியைக் கொடுத்தால் அவரால் நிர்வாகம் செய்ய முடியாது. அவர் கல்லூரியையும் தருவதில்லை. அன்னை தருவது பல்கலைக்கழகம்.
- அதைப் பெறும்பொழுது சமர்ப்பணத்தால் *மட்டும்* பெற முயன்றால், பெறுபவர் நிர்வாகத் திறமை உயரும். வந்ததை நிர்வாகம் செய்ய முடியும்.
- பலிக்கும்போல் தெரியும்பொழுது ஏற்படுபவை இரண்டு.
  1. சமர்ப்பணம் அடியோடு மறந்துவிடும்.
  2. வரட்டும், வந்தால் நான் பார்த்துக் கொள்வேன்.
- வரும், பலிக்கும், பலித்த பிறகு எல்லாம் தவறாகும். சமர்ப்பணம் நினைவுக்கே வராததால், பல்கலைக்கழகம் சுருங்கி, கல்லூரியும் ஆகாமல், பெரிய பள்ளிக்கூடமாகும். அதுவும் இவர் நடத்திய பள்ளியைப் போல் இரு மடங்கிருக்கும்.
- காரியம் கூடி வராத பொழுது மனம் கரித்துக் கொட்டும்,

  சபித்தபடியிருக்கும்.

  எவரையும் சபிக்கும், எல்லாவற்றையும் சபிக்கும்.

  சாபம் சபிப்பவருக்கே பலிக்கும்.

*தொடரும்....*

❃❃❃

# இனிய உறவுக்கு இருபது வழிகள்

**(மூலம்: கேரி ஜேக்கப்ஸ் எழுதிய Rules for Happy Harmonious Relationships தமிழாக்கம்: லதா சந்திரசேகரன்)**

1. அன்பர் குறை கூறுதல் மூலம் எந்த நடத்தையைச் சீர் செய்ய விழைகிறாரோ, அந்த நடத்தை குறை கூறுவதால் மேலும் மோசமாகும். குறை கூறும் திறனை அன்பர் இழக்க வேண்டும்.
2. எந்த அளவிற்கு அன்பர் குறைவாக எதிர்வினை ஆற்றுகிறாரோ, அந்த அளவிற்கு எதிர்வினைக்கான காரணமும், எரிச்சலும் குறையும்.
3. எந்தப் பிணக்கிலிருந்தும் அன்பர் விரைந்து விலகுதல் நலம்.
4. எப்போதும், எல்லாச் சமயங்களிலும் சந்தேகத்தின் சாதகமான பலனை அன்பர் அடுத்தவருக்குத் தர வேண்டும்.
5. ஒரு துளி பொறுமை சுமுகமின்மையைக் கரைக்கும். உண்மையான பொறுமை அன்பர் தன்னை அறிவதன் மூலம் வரும்.
6. அன்பர், வேடிக்கை என்ற பெயரால் எள்ளி நகையாடல், கேலி, குத்தல் ஆகியவற்றைச் செய்வதை தவிர்க்க வேண்டும். அவை செழித்த மழைக் காட்டிலுள்ள மலர்களை விஷமாக்கும் அமில மழை போன்றவை.
7. அன்பர் பக்கம் நியாயம் இருந்தாலும்கூட, அடுத்தவர் மீது தவறான உள்நோக்கங்களைக் கற்பிக்கக்கூடாது.
8. ஒரு பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்கும் வழி அப்பிரச்சனையை முழுவதுமாக மறந்துவிடுவதே. கடந்த கால வருத்தங்களை எச்சுவடும் இன்றி அன்பர் விடை கொடுத்து அனுப்பிவிட வேண்டும்.



9. எப்போதெல்லாம் அன்பருக்குத் தான் செய்வது சரி என்று நிச்சயமாகத் தோன்றுகிறதோ, அப்போதெல்லாம் அவர் அடுத்தவரின் கோணத்தில் விஷயத்தை அணுக வேண்டும். அப்போது அதில் மதிக்கத்தக்க உண்மை ஒன்றை அன்பர் கண்டறிவார்.
10. அன்பர் தான் சொல்வதுதான் சரி என்று வாதாடி தன் விருப்பத்தைச் சாதித்துக் கொள்வது அகந்தை வெற்றி முழக்கமிடுவதாகும். அது உறவுகளை அழிக்கும். அன்பர் என்பவர் பெருந்தன்மையானவராக, பிறரது விருப்பத்திற்கு மதிப்பு கொடுப்பவராக, அன்பானவராக, தன்னைத் தருபவராக இருக்க வேண்டும்.
11. அன்பர் தன்னை மாற்ற அதிகமாகவும், அடுத்தவரை மாற்ற குறைவாகவும் முயன்றால் உறவு மேம்படும்.
12. அன்பர் அடுத்தவரின் உணர்ச்சிகளையும், அறிவுணர்வு-களையும் விமர்சனமோ, ஆராய்ச்சியோ இல்லாமல் ஏற்று அங்கீகரிக்க வேண்டும்.
13. முழுமையான தனிப்பட்ட கவனம் தீவிரமான பிரியத்தை வளர்க்கும்.
14. அடுத்தவரின் முழு ஒத்துழைப்பைப் பெற சிறந்த வழி, அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல், உறவை மேம்படுத்த அன்பரே நூறு சதவீத பொறுப்பை ஏற்பதாகும்.
15. அன்பர் தனக்கும், அடுத்தவருக்கும் உள்ள வேற்றுமைகளைப் புரிந்து போற்ற கற்று கொள்ள வேண்டும்.
16. பிரியத்தை எந்தச் சிறிய அற்பமான காரியத்தின் மூலமும் வெளிப்படுத்தலாம்.
17. அன்பர் எதையும் தானாகவே தீர்மானித்துக் கொள்ளக் கூடாது. அடுத்தவருக்குரிய பெருமையை, அது மிகச் சிறிய மகிழ்ச்சியான நிகழ்ச்சியாக இருந்தாலும், முழுமையாகத்

தந்துவிட வேண்டும்.

18. சொன்ன சொல்லைவிட மௌன விருப்புறுதி அதிக வலிமையானது. அடுத்தவரிடமிருந்து எதையேனும் பெற அன்பர் தீவிரமாக விரும்பினால், அதற்காக மௌனமாக விழைவது வாய்விட்டுக் கேட்பதைவிடச் சிறந்தது.

19. அடுத்தவரின் மௌனங்களை அன்பர் காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவற்றை அன்போடும், புரிதலோடும் ஏற்றுக் கொண்டு மறுமொழி தர வேண்டும்.

20. நன்றியறிதல் ஓர் ஆன்மீக உணர்ச்சி. அன்பர் எதற்காக நன்றியோடு இருக்கிறாரோ, அதை அந்த நன்றியறிதல் அதிகமாகப் பெற்றுத் தரும்.

***இவ்விருபதையும் இதயத்தில் நிறுத்துவது அன்னை நினைவு. - கர்மயோகி***

❃❃❃

**ஜீவிய மணி**

***கையால் செய்வதே காரியம்.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# கொடுமை

மனிதன் விரும்பி ஒதுக்குவது கொடுமை. தாய் குழந்தைக்கு வற்புறுத்தி மருந்து தருவதைக் கொடுமையென எவரும் கொள்ள மாட்டார்கள். இருந்தாலும் பார்க்க சிரமமாக இருக்கிறது. **தாய் குழந்தைக்கு உடல் நலம் பேண மருந்து கொடுப்பதைப் போல ஒரு ஆத்மாவுக்கு அளவு கடந்த அதிர்ஷ்டம் தர தெய்வம் முடிவு செய்துவிட்டால், அது பயன்படுத்தும் முறைகளில் கொடுமையொன்று.**

- இல்லாத குடும்பத்தில் துணிக்குச் சிரமம். ஏராளமாக உள்ள வீட்டில் ஏராளமாக உள்ள துணிமணிகளை எடுத்து உடுக்கத் தடை செய்யும் அமைப்பு ஏராளமாக வாழ்வில் உள்ளன.
- அப்படி ஒரு சிறுவன் நல்ல சட்டைக்காக அழுவது பார்க்க மனம் பதைக்கும்.
- ஏராளமான செல்வமுள்ள குடும்பத்தில் பிறந்தாலும், எதுவுமில்லாத வீட்டில் பிறந்தாலும் நல்ல டிரஸ் போட்டுக் கொள்ளும் அம்சமில்லாத குழந்தைக்கு, அந்த அம்சத்தை வாழ்வு ஏற்படுத்தும் முறைகளில் ஒன்று கொடுமை.
- எந்த மேற்படிப்புக்கும் வசதியற்றவனுக்கு, மேற்படிப்பைப் பெற்றுக் கொடுத்து, சாப்பிட வழியில்லை என்பதால் சாப்பாடு போட்டு, தங்க இடமில்லாததால், இடம் கொடுத்து, நடந்து தூரம் போக சைக்கிள் கொடுப்பது ஒரு முறை.
- அவற்றிற்காக அளவு கடந்து ஏங்க விட்டு, வருஷக்கணக்காக மனம் பதறி அடங்கியபின் மனம் பெறும் தகுதியை அடைந்த பின் அளவுகடந்து தருவது ஒரு முறை. இது நமக்குக் கொடுமையாகத் தெரிகிறது.
- துணி வாங்க வசதியில்லை. எப்படியோ ஓரிரு சமயம் ஏராளமான நல்ல துணிகள் வந்து சேர்ந்தன. போட அனுமதியில்லை. போட அனுமதி கிடைத்தால், முக்கிய விசேஷத்திற்கு அனுமதியில்லை. மனம் புழுங்கும், கசங்கும், கண் விழி பிதுங்கும். இது வாழ்வு மனத்தைத் தயார் செய்யும் முறை. இச்சிறுவன் பிற்காலத்தில் துணிக்கடை வைத்து, பல துணி ரகங்களை ஏற்படுத்தி, பல ஊர்களில் கடைகளை ஏற்படுத்தி, துணி சமுத்திரத்தில் மிதக்கிறான்.
  - **அன்பரானபின் பட்ட சிரமங்களை அடிப்படையாய் வைத்து அவற்றைத் திருவுருமாற்றி அபரிமிதமாக வழங்குவது அன்னையின் பாணி.**
  - **கொடுமை வளமாகத் திருவுருமாறுவது அன்னை ஜீவியம் அளிக்கும் அன்பளிப்பு.**

***அன்பு சுரப்பது, அதிர்ஷ்டம் பெறுவது.***

❀❀❀

# பார்வை

மகான்களைப் பார்ப்பதைத் தரிசனம் என்கிறோம். அந்த நேரம் ஆன்மா மலர்ந்து மகான் அனுக்கிரஹம் பெற்று, உயர்ந்து, புதிய பிறப்பெடுக்கிறது. இது ஒரு மகான் தன்னை தரிசிக்க வருபவருக்குத் தான் முடிவு செய்து கொடுப்பது. எளிய மக்கள் பார்வை ஒரு மகானுக்கு உடலில் எரிச்சலை மூட்டும். அன்பரொருவர் அன்னையைத் தரிசிக்க வந்தார். அன்னை சேவையிலிருப்பவர். இரண்டாண்டுகளாக ஆசிரமம் வருபவர். அன்னையைப் பால்கனி தரிசனத்தில் தவறாது பார்த்தவர்.

> ''என் பார்வை அன்னை முகத்தில் பட்ட இடத்தில் தோல் சுள்ளென சுருங்கியது'' என்றார்.

3 மாதத்திற்கொரு முறை 2000 சாதகர்கட்கு பகவானும் அன்னையும் தரிசனம் கொடுத்தார்கள். பிப்ரவரி 21 தேதிக்குப் பின் தரிசனம் ஆகஸ்ட் 15இல் வரும் வரை சாதகர்கள் மனம் ஏக்கமடைகிறது என்றறிந்து அன்னை புதுவைக்கு நிரந்தரமாக வந்த ஏப்ரல் 24ஆம் தேதியைத் தரிசன நாளாக்கினார்.

- பகவான் மாலையில் தன் அறையிலிருந்து அன்னை அறைக்கு வருவார். குறிப்பிட்ட நேரமாகக் கூற முடியாது.

  அன்னை அறையில் எந்த நேரமும் சில சாதகி, சாதகர் வேலை செய்து கொண்டிருப்பார்கள். பகவான் நுழைந்தால் அவரை நிமிர்ந்து பார்க்கக்கூடாதென உத்தரவு. அப்படியே எழுந்து முகத்தைத் திருப்பி வெளியே போக வேண்டும்.
- அவர்களாகத் தருவது தரிசனம்.
- அதின்றி நம் பார்வை படுவது வலி.

***அமிர்தமான இதயம் அதிர்ஷ்டமான வாழ்வு.***

❀❀❀

Vol. I Issue 4 July 2011
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
**N.Asokan**

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191

Vol. I Issue 4 July 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூலை 2011